சமய-சமூக இலக்கிய சஞ்சிகை

சித்திரை - ஆனி 2017

ISSN 2513 -2547

# அலை ஓசை


மனித உரிமைகள் சிறப்பிதழ்

பேசத்தெரியாதவர் சார்பாகப் பேசு...
திக்கற்றவர்கள்
எல்லோருடைய உரிமைக்காகவும் போராடு!

நீ.மொ.31:8

UN Human Rights

Protects Fundamental Rights and Freedom



50/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை ஓசை

சமய-சமூக இலக்கிய சஞ்சிகை

அலை 02 ஓசை 02

சித்திரை – ஆனி 2017

**ஆசிரியர் :**
அருட்தந்தை ஜொஹான் பேர்னாட்

**இணைஆசிரியர்:**
கிறிஸ்டி முருகுப்பிள்ளை

**ஆசிரியர் குழு:**
ஆசை எட்வேட்
செ.ஞானராசா
சுரேந்தினி மணிவண்ணன்

**ஆலோசகர்:**
அருட்தந்தை ஏ.ஏ. நவரெட்ணம்

**கணனி எழுத்துருவாக்கம்:**
கே. டெதுர்சன்

**கணனி வடிவமைப்பு:**
ச.பிரதீபா

**வெளியீடு:**
அலைஓசை கலைத் தொடர்பகம்
திருகோணமலை மறை மாவட்டம்

**முகவரி:**
அலைஓசை கலைத்தொடர்பகம்
இல.17, புனித அந்தோனியார் வீதி
திருகோணமலை
mail: trincoalaiosai@gmail.com

**பதிப்பகம்:**
ரிங்கோ பிறிண்டர்ஸ்
157, திருஞானசம்பந்தர் வீதி,
திருகோணமலை
0703555740 – 0262227866

**விலை ரூபா 50.00**
**ஆண்டுச் சந்தா – ரூபா 300.00**
**(தபாற்செலவு உட்பட)**



| | |
|---|---|
| ஆசிரியர் ஓசை | ..... 01 |
| உரிமைப் போராட்டங்கள் | ..... 02 |
| மனித உரிமை மீறல் (கவிதை) | ..... 03 |
| தமிழர்களும் ஐ.நா..... | ..... 04 |
| பரதேசி | ..... 06 |
| தடுப்பு (உருவகக் கதை) | ..... 09 |
| மனித உரிமைகள் (கவிதை) | ..... 10 |
| முதலுதவியும்...... | ..... 11 |
| மறத்தமிழர் இன்று | ..... 13 |
| நேர்காணல் | ..... 15 |
| இளையோர் ஓசை | ..... 18 |
| நிலாவெளி மெதடிஸ்த தேவாலயம் | ..... 21 |
| நாடும் நாமும் | ..... 25 |
| குருவை மிஞ்சிய சீடன் (குறுங்கதை) | .... 29 |
| கிறிஸ்தவ நாகரீகம் | ..... 31 |
| இலக்கிய ஓசை | ..... 33 |
| வத்திக்கான் செய்திகள் | ..... 35 |
| புதிரப் போட்டி | ..... 36 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு படைப்பாளிகளே – ஆசிரியர்


ALAI OSAI CULTURAL CENTRE
NO.17, ST ANTONY STREET,
TRINCOMALEE
026 222 0077


**இளையோர் சிறப்பிதழாக மலரவிருக்கும் அடுத்த அலை ஓசை இதழுக்கு ஆக்கங்களை 2017 ஆவணி 15ற்கு முன் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியர் ஓசை

**கல்வியை ஊட்டுகின்ற தலைமைகள் அதற்கேற்ப வேலை வாய்ப்புகளையும் அவர்களாகவே தேடிக் கொள்வதற்கும் புகட்ட வேண்டும்.**

**"அலை ஓசை"** சஞ்சிகை நடப்பு ஆண்டில் புதிய வியூகத்தை வகுத்து ஒவ்வொரு இதழும் பொருத்தமான கருப்பொருளோடு வெளிவருவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டதன் விளைவாக கடந்த அலை ஓசை சஞ்சிகை 'அன்னையர் தின' இதழாக வெளிவந்தது. அட்டைப்படம் தொடங்கி ஆக்கங்கள் வரை வித்தியாசமாக அமைந்தன. வாசகர்கள் மத்தியிலும் முக்கியமாக கத்தோலிக்கர்கள் அல்லாத ஏனைய வாசகர்கள் மத்தியில் வரவேற்பு பெற்றிருந்தது.

அந்த வகையில் இந்த இதழானது **"மனித உரிமை"** எனும் கருத்தோவியத்தை மையப் பொருளாக கொண்டு மிகவும் அழகாய் உங்கள் கரங்களுக்கு வந்திருக்கிறாள்.

மனித உரிமை என்று சொல்லும் போது ஒருவருடைய சுதந்திரமானது மற்றவருடைய மூக்கை நெருங்கும் வரைக்கும் தான், மூக்கை தொட்டு விட முடியாது என்பது தொன்று தொட்டு தெரிவிக்கப்படுகின்ற விடயமாகும். இவ்வாறு நோக்கும்போது மனித மாண்பு எத்தனை சிறப்பானது, மகத்துவமானது என்பதனை கற்றுக்கொள்ளலாம்.

இலங்கை மண்ணில் நடந்தேறிய நடந்தேறிக்கொண்டு இருக்கும் மனித உரிமை மீறல்கள் சொல்லொண்ணாதவை. ஆனால் எதற்கும் முடிவிருக்கின்றது, பதில் சொல்லித் தான் ஆக வேண்டும், பொறுப்பேற்கத்தான் வேண்டும், விடை கண்டுதான் ஆக வேண்டும். ஏனெனில் எல்லோர்க்கும் பெரியவர் ஒருவர் பரலோகத்தில் அனைத்தையும் பார்த்த வண்ணமே பிரசன்னமாகியுள்ளார். திருவிவிலியம், நீதி மொழிகள், ஆகமத்தில் 5:21 இவ்வாறு சொல்கிறது. 'மனிதனின் வழிகளில் ஒன்றும் ஆண்டவர் கண்களுக்குத் தப்புவது இல்லை அவர்களுடைய பாதைகள் எல்லாம் அவர் சீர்தூக்கிப் பார்க்கின்றார்' எனவே கடத்தச் சொன்னவன், கடத்தியவன், கொன்றவன், கொலைக்கு உடந்தையாய் இருந்தவன், கொள்ளை அடித்தவன், வலிந்து காணாமல் செய்தவன், அதற்கு கட்டளை இட்டவன், உரிமையை, சுதந்திரத்தை, மானத்தை, மரியாதையை, மனித மாண்பை பறித்தவன், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன் கொடுமை புரிந்தவன், மானபங்கப் படுத்தியவன், மண், பொன், பெண் அபகரிப்புச் செய்தவன், அநியாயத்தை அட்டூளியத்தைக் கண்டும் காணாமல் இருந்தவன், இன, மொழி, சாதி, நிறம், என பாரபட்சம் பார்த்து ஆவன செய்தவன் ஆகிய அனைத்துத் தரப்பினரும் கடவுளுக்கு முன் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

இவற்றிற்கு மத்தியில் நீண்ட காலமாக சிறையில் வாடும் அரசியல் கைதிகளின் நிலை பரிதாபமாக உள்ளது. வாழ்வும் இல்லை சாவும் இல்லை என்ற நிலையில் யுத்தம் முடிந்தும் நீண்ட காலமாக அடைபட்டுக் கிடக்கிறார்கள். சரியான முறையில் கைதிகளை விசாரித்து விரைவாக குடும்பத்தோடும் சமூகத்தோடும் ஒன்று சேர்த்து புது வாழ்க்கையை ஆரம்பிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, வேலையில்லா பட்டதாரிகளது கோஷம், எதிர்ப்புப் போராட்டம் தொடர்ந்தும் வலுவடைந்த நிலையில் நாடு திண்டாடுகின்றது. உரிய வேலை இல்லாமை, வேலை கொடுத்தால் சம்பளம் கொடுக்க முடியாமை, படித்த சான்றிதழ் இருந்தும் எழுத்துப்பரீட்சை, நேர்முகப் பரீட்சையில் வினைத்திறனை நிரூபிக்க முடியாமை போன்ற பிரச்சனைகள் எழுவினைகளாக உள்ளன. கல்வியை ஊட்டுகின்ற தலைமைகள் அதற்கேற்ப வேலை வாய்ப்புகளையும் அவர்களாகவே தேடிக் கொள்வதற்கும் புகட்ட வேண்டும். படித்தும் தகுந்த வேலைகள் கிடைக்காததால் இன்று இளம் சமூகம் பல்கலைக் கழக பட்டப் படிப்பிற்கு மேற்கொண்டு செல்ல விருப்பம் இல்லாதிருப்பதை காணக்கூடியதாக உள்ளது

அண்மையில் இலங்கையில் நடந்த வருத்தத்திற்குரிய விடயம் மீதொட்ட முல்லை குப்பை மேடு சரிந்து விழுந்து பரிதாபமாக புதைந்து மாண்டு போன உறவுகளின் அவல நிலைதான். ஆய்வாளர்கள் முன் கூட்டியே எச்சரித்தும் உரிய நடவடிக்கை எடுக்காத அசமந்தப் போக்கை கண்டிக்காமல் இருக்க முடியாது. அன்று தொட்டு இன்று வரை 'வெள்ளம் வரும்முன் அணை கட்டவேண்டும்' என்ற தார்ப்பரியத்தை இலங்கை ஆட்சியாளர்கள் கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. மீதொட்டமுல்லை வாழ் மக்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை அலை ஓசைக் குடும்பம் தெரிவித்து நிற்பதோடு அவர்களது உரிமைகளுக்காகவும் குரல் கொடுக்கின்றது.

**- ஆசிரியர் -**

**இறை வார்த்தை**

**"ஏழையின் கூக்குரலின் போது எவன் காதைப் பொத்திக் கொள்கின்றானோ, அவன் தானே உதவிக்காக மன்றாடும் போது எவரும் அவனுக்கு செவி கொடுக்கமாட்டார்"**

**நீ.மொ 21:13**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமது சமூகம் சார் உரிமைகளுக்காகப் போராடிய உத்தமர்கள்




நெல்சன் மண்டேலா (Nelson Rolihlahla Mandela, 18 ஜூலை 1918 - 5 டிசம்பர் 2013), தென்னாப்பிரிக்காவின் மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் குடியரசுத் தலைவர் ஆவார். அதற்கு முன்னர் நிறவெறிக்கு எதிராகப் போராடிய முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்தார். தொடக்கத்தில் அறப்போர் (வன்முறையற்ற) வழியில் நம்பிக்கை கொண்டிருந்த இவர், பிறகு ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் இராணுவப் பிரிவுக்கு தலைமை தாங்கினார். இவர்கள் மரபுசாரா கெரில்லாப் போர்முறைத் தாக்குதலை நிறவெறி அரசுக்கு எதிராக நடத்தினார். மண்டேலாவின் 27 ஆண்டு சிறைவாசம், நிறவெறிக் கொடுமையின் பரவலாக அறியப்பட்ட சாட்சியமாக விளங்குகிறது. சிறையின் பெரும்பாலான காலத்தை இவர் ராபன் தீவில் சிறிய சிறை அறையில் கழித்தார். 1990 இல் அவரது விடுதலைக்கு பிறகு அமைதியான முறையில் புதிய தென்னாப்பிரிக்கக் குடியரசு மலர்ந்தது. மண்டேலா, உலகில் அதிகம் மதிக்கப்படும் தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

மண்டேலா, இனவெறி ஆட்சியில் ஊறிக்கிடந்த தென்னாபிரிக்காவை மக்களாட்சியின் மிளிர்வுக்கு இட்டுச் சென்றவர். அமைதி வழிப் போராளியாக, ஆயுதப் போராட்டத் தலைவனாக, தேசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்ட குற்றவாளியாக, 27 ஆண்டுகள் சிறையில் வாடி பின்னர் விடுதலையாகி குடியரசு தலைவராக, அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராக இவரின் அரசியல் பயணம் தொடர்ந்தது. ஜூன் 2008ல் பொது வாழ்க்கையிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.




மார்டின் லூதர் கிங் (Martin Luther King, Jr. ஜனவரி 15, 1929 இல் பிறந்தார். ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்க-அமெரிக்கத் தலைவராவார். அமெரிக்க குருமார்களில் ஒருவர். ஆர்வலர் மற்றும் ஆபிரிக்க அமெரிக்க மனித உரிமை இயக்கத்தில் தலைவராக இருந்தார். அவர் காந்தியவழியில் சிறந்த வன்முறையற்ற அறப்போராட்டத்தைப் பயன்படுத்தியவர். மார்ட்டின் லூதர் கிங் அமெரிக்க முற்போக்கு வரலாற்றில் ஒரு தேசிய சின்னமாகக் கருதப்படுகிறார். பாப்திசுதப் போதகராக இருந்த கிங் தனது இளமைக் காலத்திலேயே சமூக உரிமைவாதியாக இனங்காணப்பட்டார். 1955 இல் மாண்ட்கோமரி பேருந்து புறக்கணிப்புப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார். 1955 இல் தெற்குக் கிழக்காசியத் தலைவர்கள் மாநாடு நிகழவும் உதவினார். அம்மாநாட்டின் முதல் தலைவராகவும் ஆனார். இவ்வமைப்பு கிங் தலைமையில் ஜார்ஜியாவில் அல்பேனி எனுமிடத்தில் 1957 இல் நிறப்பாகுபாட்டிற்கு எதிராக நடத்திய போராட்டம் தோல்வியடைந்தது. 1962 இல் அலபாமாவில் நடந்த வன்முறையற்ற வழியில் இவர் நடத்திய அறப்போராட்டம் பலரது கவனத்தை ஈர்த்ததுடன் தேசிய அளவில் புகழ்பெற்றது. கிங் 1963 இல் "வேலையும் சுதந்திரமும் வேண்டி வாஷிங்டனுக்கு பேரணி" என்ற மிகப் பெரிய பேரணிக்கு ஏற்பாடு செய்தார். பெருமளவில் மக்கள் திரண்டனர். இங்குதான் அவர் தனது "எனக்கொரு கனவு" என்ற புகழ்பெற்ற சொற்பொழிவினை ஆற்றினார். அமெரிக்க வரலாற்றில் இது ஒரு மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தியது. இதன் பிறகு அமெரிக்க உளவுதுறை (FBI) இவரைக் கண்காணித்து அரசுக்கு தகவல்களை அனுப்பத் தொடங்கியது. மேலும் தற்கொலை செய்து கொள்ளுமாறு ஓர் அநாமதேய மிரட்டல் கடிதமும் விடுத்தது. அடுத்த ஆண்டு அதாவது அக்டோபர் 14, 1964 ஆம் ஆண்டில் வன்முறையற்ற வகையில் நிறவெறிக்கெதிராக பாடுபட்டதற்காக மார்ட்டின் லூதர் கிங்குக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவர் 1968 ஏப்ரல் 4 ஆம் நாள் டென்னசி மாநிலத்தில் மெம்ஃபிஸ் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




எங்கள் பிஞ்சு
குழந்தைகளும்
பிணியறியாத
மலர் சிட்டுகளும்
பனியிலும், வெயிலிலும்
பரிதவித்து வாடுவதை
இரக்கம் கொண்ட
மனதோரே நீங்கள்
ஏற்பீர்களா?

வயதெல்லை
தாண்டியும் நம்
வயோதிப மனிதர்
நிம்மதியாய் வீட்டில்
நித்திரை கொள்ளாமல்
நிம்மதியற்று
காட்டில் கானல்
வெயிலிலும் உடல்
கருக கிடப்பதை
இரக்க மனதோரே
நீங்கள் ஏற்பீர்களா?

கர்ப்பிணிப்பெண்களும்,
கைம்பெண்களும்
கட்டி அணைத்து
கண்ணீர் சொரிவதை
எட்ட நின்று
ஏளனம் செய்யும்
சுந்தரப்பெண்களே!
மனித உரிமை மீறலை
ஏற்பீர்களா சொல்லுங்கள்?

உலகாண்ட தமிழிச்சி
உரிமை பெற்ற தமிழிச்சி
உலகத்தார் பரிகசிக்க
உள்ளம் வெதும்பி
உடல் கருக காட்டில்
உருக்குலைந்து போவதை
உங்கள் கவனத்தில்
உணர்ந்து மனித உரிமை மீறலை
ஏற்பீர்களா சொல்லுங்கள்?



கவிஞர், அருட்கவி,
C.N.துரைராஜா,
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தமிழர்களும் ஐ.நா மனித உரிமை பேரவையும்



செ.ஞானராசா.

**காணாமல் போனோர் குறித்த சட்டத்தைப் பற்றி பேசும் போது, தனது அரசு ஒரு பொழுதும் இலங்கைப் படையினரை குறி வைக்காது என்கின்றார் இலங்கை அரசுத் தலைவர்**

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள 34/1 தீர்மானத்தின் படி, தமிழ் மக்களுக்கு நீதி மறுக்கப்பட்டிருப்பதை உணர்த்துகிறது. இவ் விடயம் உலகத் தமிழருக்கு பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 23.03.2017 இல் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் இரண்டாண்டு கால அவகாசத்தை வழங்கி உள்ளது. 16.09.2015ல் ஐ.நா மனித உரிமைச் சபையின் ஆணையாளர் அலுவலகம் சமர்ப்பித்த அறிக்கையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நீர்த்துப்போன நிலையில் 01.10.2015ல் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

ஐ.நா மனித உரிமைச்சபை விசாரணைக் குழு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களைச் சந்திப்பதற்கு இலங்கை ஆட்சியாளர்களினால் அனுமதி மறுக்கப்பட்டது. இந்த அறிக்கை (OISL) இலங்கை அரசாங்கம் புரிந்த போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விவரித்திருந்தது. அதே சமயத்தில் ஜேர்மனியின் ப்ரேமனில் நடந்த மக்கள் தீர்ப்பாயம் "இனப்படுகொலை" நடந்துள்ளது என்று தீர்ப்பளித்துள்ளது. 30/1 முன்வைத்திருந்த தீர்மானம் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்தை மீளக்கையளிப்பது, பயங்கரவாத தடுப்புச்சட்டத்தை இரத்து செய்வது, சித்திரவதைகள் குறித்து விசாரணை நடத்துவது, பாலியல் வன்முறைகள் குறித்து விசாரிப்பது என்பவற்றுக்கு உறுதி அளித்திருந்த இலங்கை அரசாங்கம் இதுவரை எதனையும் செய்யவில்லை.



போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலைக்கான குற்றங்கள் குறித்து விசாரிக்க முடியாத நிலையில் இலங்கையின் நீதிமன்ற வழிமுறைகள் உள்ளன. அனைத்துலக விசாரணைக்கான கோரிக்கை நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. காணாமல் போனோர் குறித்த சட்டத்தைப் பற்றி பேசும் போது இலங்கை அரசுத் தலைவர் தனது அரசு ஒரு பொழுதும் இலங்கைப் படையினரை குறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்காது என்று கூறியுள்ளார். இலங்கையின் நீதித்துறை அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, இலங்கை இராணுவத்தின் மீதான அனைத்துப் போர்க்குற்றங்களையும் மறுத்திருக்கின்றார். மேலும் அவர் இலங்கை அரசு மீது குற்றம் சுமத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறியுள்ளார். இலங்கை இராணுவத்தின் பாரிய குற்றங்கள் குறித்து விவாதிப்பவர்கள் நாட்டின் எதிரிகள் என்றும், இராணுவத்தின் எதிரிகள் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

புதிய கால அட்டவணையின் பிரகாரம் 2018 மார்ச்சில் ஜெனீவாப் பேரவையில் இடம்பெறும் 37 ஆவது அமர்வில் அதுவரை காலமும் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பாக எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிப்பதுடன் 2019 மார்ச்சில் இடம்பெறும் 40 ஆவது அமர்வின் போதே விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்படும். கால அவகாசம் வழங்குவதற்கு கடும் எதிர்ப்பும் ஆட்சேபனையும் தெரிவித்த போதிலும் 47 உறுப்பு நாடுகளைக் கொண்ட உனித உரிமைகள் பேரவை காலநீடிப்புக்கு ஏகமனதாக அங்கீகாரம் வழங்கியுள்ளது. கால நீடிப்பு குறித்து ஆளும் தரப்பு மகிழ்ச்சியடையலாம். ஆனால், நாட்டு மக்களின் ஒரு பிரிவினரின் நீதி, நியாயத்துக்கான கோரிக்கைகளுக்கு "பொறுப்புக் கூறல்" கடப்பாட்டை தொடர்ந்தும் இழுத்தடிக்கக் கூடாது.

இலங்கை அரசாங்கம் ஒரு பொழுதும் தமிழர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றவில்லை. அரசியல் தீர்வையும் முன்வைக்கவில்லை. இந் நிலையில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை உறுதி செய்ய வேண்டியதும், இன நெருக்கடிக்கு வடக்கு, கிழக்கு பகுதியிலும், புலம்பெயர் தமிழர்களிடத்திலும் பொது வாக்கெடுப்பினை நடத்துவதற்குரிய நிலையை ஏற்படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.






இறால்குழி
சிவகுருநாதன்

ஆழக்கடல் அலை ஓசை
அகிலமெல்லாம் ஒலிக்கட்டும் - அதனால்
ஈழம் எல்லாம் வாழ
புதிய ஒளி பிறக்கட்டும்
ஏழை செல்வர் எனும் பேதம் - இங்கு
இல்லா தொழியட்டும்

மனித நேயம் மண்ணில் மலர
மக்களெல்லாம் ஒன்றுபட்டுழைக்க
புனித நெறியாம் மனித உரிமைகள்
பூமியில் புலர வேண்டும் வேண்டும்

மனித உரிமைக்காக – உலகில்
மடிந்த உயிர்கள் ஆயிரம் ஆயிரம் - அது
இனிமேலும் வராதிருக்க எமையெல்லாம்
இறைவன் பாதுகாக்கட்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரதேசி

அருட்சகோதரி மனோ H.C
வெளிமடை






மனித உரிமை மீறலுக்கான சான்று...

இன்று உலகம் முழுவதும் புகழ்ந்து பேசப்படுவது Ceylon tea, இதற்கு முக்கிய காரணமானவர்கள் எம் மலையக உறவுகள். மலையகத்திலே பிறந்து மலையக மக்கள் (தோட்டக்காட்டார் என்று தாழ்வாக) பெயர் சூட்டப்பட்டு எம் நாட்டுக்கு உயர் வருமானம் தேடி கொடுப்பவர்கள் எம் மலையக உறவுகள். ஆனால் அவர்களே இன்று வறுமைக் கோட்டுக்குள் சிக்கி அடிப்படைத் தேவைகளை கூட நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறார்கள்.

போதியளவு ஊதியம் (ரூ.1000) கொடுக்கப்படாததால் அதைக் கேட்டு எம் மலையக உறவுகள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் உண்ணாவிரத போராட்டங்களை நடத்தியதை அனைத்து ஊடகங்களும் எடுத்து காட்டின. ஆனால் இவர்கள் எழுப்பிய இந்த அபயக்குரலை யார் தான் கேட்டார்கள்?

இதை சாதகமாக பயன்படுத்தி பலர் அவர்கள் முன்னிலையில் தோன்றி பொய்யான மாய வார்த்தைகளை கூறி அவர்கள் கேட்ட நியாயமான சம்பளத்தை கொடுக்காமல், அவர்களது கோரிக்கையை உதாசீனப் படுத்தி, தமது திட்டத்தை மட்டும் நடைமுறைப்படுத்தி, தாம் விரும்பிய ஊதியத்தை (ரூ750) வழங்கி, ஏழை மக்களை ஏமாற்றி, தமது நோக்கத்தை நிறைவேற்றிய சாதனையாளர்களாகி, குரல் கொடுத்த மக்களின் வாயை அடைத்து விட்டார்கள். ஆனாலும் இது ஓர் அப்பட்டமான மனித உரிமை மீறல் அல்லவா? இவர்களின் அடிமை வாழ்வு அழியப் போவதில்லை, அபயக் குரலுக்கு அர்த்தம் கேள்விக் குறிதான். இன்று இந்த நிலைமைக்கு அடித்தளமாக பல ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் சாலூர் கிராமத்திலிருந்து பச்சைமலைக்கு ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட அப்பாவி மக்களின் வாழ்க்கை முறையை விபரிக்கும் திரைப்படம் தான் பாலாவின் பரதேசி.

தேயிலைத் தோட்டங்களில் அப்பாவி ஏழைத் தமிழர்கள் எப்படி உரமாக மாறினார்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்ற கண்ணீர் சோகக் கதையை ஒரு ஆவணப்படம் போல தெளிவு படுத்துகிறது இயக்குனர் பாலாவின் பரதேசி திரைப்படம். இந்தியாவில் சாலூர் கிராமத்தில் வசிக்கும் அரைக் கிறுக்கன் ஒட்டுப் பொறுக்கி என்னும் ராசாவுக்கு (அதர்வா) பெற்றெடுத்தவர்கள் இல்லை, அவனின் பாட்டியின் தயவில் வளர்கின்றான். ஊரில் என்ன நடந்தாலும் தண்டோரா அடித்து அதில் கிடைப்பதைக் கொண்டு அவனும் அவன் பாட்டியும் பசியாறினர். அதே ஊரில் வாழ்ந்த அங்கம்மாவும் (வேதிகா) ராசாவும் ஒருவரை ஒருவர் விரும்பினார்கள். அந்த உறவு ஊருக்கு தெரியாமல் ஒரு புதிய உயிரை உருவாக்கியது. அங்கம்மா தன் உறவின் அடையாளமான அக்கருவை கர்ப்பத்தில் சுமக்க தொடங்கினாள். இதற்கிடையில் சாலூரில் பஞ்சம், பசி, வேலையில்லா திண்டாட்டம் மக்களை வாட்டியது. இவ் அவல சூழ்நிலையில் தேயிலை தோட்டத்தில் வேலை செய்ய தேவையான வேலையாட்களை தேடி வந்த கங்காணியின் இனிய ஏமாற்று வார்த்தைகளுக்கு அடிமையாகின்றார்கள். சாலூரின் பெரும் பகுதி மக்கள் பச்சைமலை தேயிலை தோட்டத்தில் வேலை செய்ய புறப்படுகின்றார்கள். இவர்களுடன் ராசாவும் செல்கிறான். அங்கம்மா கிராமத்திலே தங்கி விடுகிறாள். பச்சை மலைக்கு சென்றவர்கள் அங்கே போன பின்பு தான் அது வேலை செய்யும் இடமல்ல கடைசி வரை அங்கேயே செத்து மடிய வேண்டிய சுடுகாடு என்பதை புரிந்து கொள்கிறார்கள். கொட்டும் பனி, அடைமழை, அட்டைக்கடி, கொள்ளைநோய், பட்டினி அதைவிட கங்காணியின் அடக்கு முறை, உறிஞ்சல், வெள்ளைக்காரனின் காமப்பசி என அத்தனையையும் சகித்தவர்களாக பாதிக்கு மேல் பலியாகி மண்ணோடு மண்ணாகிறார்கள். இது இவ்வாறு இருக்க மீண்டும் ஒரு தொகை மக்கள் அழைத்து வரப்படுகிறார்கள். அதில் ராசாவின் அங்கம்மாளும் அவர்களின் உறவுக்கு சாட்சியாக பிறந்த குழந்தையும் அடங்கினார்கள். இறந்து ஒழிந்த மக்களின் உடல் தந்த உரத்தில் தேயிலை ருசியாக கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

இந்த படம் ரசித்து பார்க்கத்தக்க படமா? என்றால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

பார்ப்பவர்கள் கண்ணுக்கு பச்சைப்பசேல் என்று காட்சி தருகின்ற தேயிலை தோட்டங்களின் பின்னால் கொடூரமாக சிந்த வைக்கப்பட்ட மக்களின் இரத்த துளிகளே சாட்சியாக இருக்கின்றது. அதே நேரம் மனதை முட்களாய் குத்தும் பல காட்சிகள் இசை, பாடல்கள், ஒளிப்பதிவு அமைந்திருப்பதை எடுத்து கூறாமல் இருக்கமுடியாது. எதை வைத்து ஒளிப்பதிவின் தன்மையை தீர்மானிக்கிறார்கள் என்பது புரியவில்லை. கதை நிகழும் காலம் எதுவாக இருந்தாலும் இயற்கையின் நிறம் மாறப்போவதில்லை. எழுபதுகளின் இறுதியில் தமிழகத்தில் வரட்சி தலை விரித்தாடியது. ஆனால் அன்றும் கூட தமிழகத்தில் எல்லா மாவட்டங்களும் பச்சையாகவே காட்சியளித்தன. காய்ந்த நிலையில் எந்த ஊரையும் பார்த்திருக்க முடியாது. சரி ஊர்களைத்தான் அப்படி காட்டுகிறர்கள் என்றால் தேயிலை தோட்டத்தையும் காய்ந்ததாக காட்டியிருப்பது எந்த வகையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமாகும்? செழியனும் பாலாவும் தான் விளக்கம் தர வேண்டும்.

அன்றைய சமூக நிலையை கச்சிதமாக சித்தரிக்கின்றார் இயக்குனர் பாலா. வேலை கேட்டு வரும் முன் பின் தெரியாத-வனை கொடூரமாக அடித்து விட்டு பின் ஒரு வண்டி விறகை உடைத்துக் கொடுக்கச் சொல்லி அதற்கு கூலியும் கொடுக்காமல் விரட்டி அடித்தவன் வெள்ளைக்காரனில்லை மாறாக அவர்களிடையே வாழ்ந்த கொள்ளைக்காரர் என்பதை தெளிவாக பதிவு செய்கிறார் இயக்குனர் பாலா. இன்னும் மதத்தின் பெயரை சொல்லி சமூக சேவை செய்ய வரும் மருத்துவர்கள் கூட மருந்து கொடுத்து நோயை விரட்டுவதை விட தங்கள் மதத்தை பரப்பி மக்களை மனமாற்றம் செய்யத் துணிவதை யாரும் இத்தனை வெளிப்பாடாக எடுத்து காட்டியதில்லை.

**பாலாவின் இந்த பரதேசி இயல்பான படம் தான். ஆனால் மனித உரிமை மீறலை வெளிப்படுத்தும் ஆவணம் என்பதையும் மறுக்க முடியாது.**

---

## ஹா! ஹா! ஹா!!!



மனைவி:

"நீங்க ரொம்ப மோசம் கல்யாணத்துக்கு முன்னாடி பார்க், பீச், ஹோட்டல், சினிமா இப்படில்லாம் எங்கெங்கே அழைச்சிட்டு போனீங்க.

ஆனா கல்யாணத்துக்கு அப்புறம் எங்கேயுமே அழைச்சிட்டுப் போறதில்லே......"

கணவன்:

"அடி அசட்டு பொண்டாட்டியே, தேர்தல் முடிஞ்சதுக்கப்புறம் எவனாவது பிரச்சாரத்துக்கு போவானா???

நீ வேற!!!"




அலையும் மனதின் ஓசைகளை
ஆற்றுப் படுத்தி ஈடேற்ற
நிலையாய் எழுந்த சிற்றிதழே
நீடு வாழ்க பணிசெய்து!

சமயம் சார்ந்து எழுந்தாலும், அதை
சற்றுத் தளர்த்தி பல்வேறு
அரிய விடயப் பரப்பினிலே
அலையின் ஓசை எழக்கண்டேன்!

அடிப்படை வாதக் கோட்பாட்டுள்
அமிழ்ந்து போகும் மதங்களினால்
உருப்படி யாக மக்களுக்கு
ஒன்றையும் சாதிக்க இயலாது

மனித இனத்தின் அவலங்களை
மாற்ற புனிதர்(கள்) அவதரித்தும்
இன்னும் இன்னும் உலகினிலே
வன்மம் தானே ஆள்கின்றது!

இனமொழி மதங்களில் பற்றுக்கள்
இருப்பதில் ஏதும் தவறில்லை
"மத"மாய் வெறியாய் அவைமாறி
மனிதரை அழிப்பதே தவறாகும்.

– ஷெல்லிதாசன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு



செங்கதிரோன்

சேனைப்பயிர்ச் செய்கைக்காக வெட்டிப் போடப்பட்டு வெயிலில் நன்றாக உலர்ந்து போய்க் கிடந்த பற்றைக்காட்டுப் பயிர்ச் செய்கைக்காரன் மூட்டிய நெருப்பு பக்கத்தில் வரட்சியால் காய்ந்து போயிருந்த பச்சைக் காட்டிலும் பற்றிக் கொண்டு சுவாலை விட்டு எரிய ஆரம்பித்தது. பச்சைக் காட்டுக்குள் தங்கள் வாழ்விடங்களை அமைத்திருந்த மிருகங்களும் அங்கு மரக்கிளைகளில் கூடு கட்டி வாழ்ந்த பறவையினங்களும். புதர் பொந்துகளில் குடியிருந்த ஊர்வனவும் நெருப்புக்குப் பயந்து காட்டுக்குள் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தன. அவற்றின் வெளியேற்றத்தைக் கண்டு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நெருப்பு எக்காளமிட்டுச் சிரித்து, உயிரினங்களைப் பார்த்து, 'எனக்குப் பயந்து எங்கே ஓடுகின்றீர்கள்?' என்று இறுமாப்புடன் கேட்டது.

காட்டு உயிரினங்கள் செய்வதறியாது திகைத்து நின்றன. காட்டை அழித்து காய வைத்து நெருப்பை மூட்டிய மனிதனை நொந்து கொண்ட அக்காட்டு உயிரினங்கள் நெருப்புக்குப் பாடம் புகட்ட எவருமில்லையே என்று ஏதிலியாய் நின்று ஏங்கி அழுதன.

சிறிது நேரத்தில் திடீரென்று வானம் கறுத்தது, குளிர்காற்று வீசிற்று. தொடர்ந்து பேரிரைச்சலுடன் மழை கொட்டத்தொடங்கியது. சுவாலைவிட்டு எரிந்த நெருப்பு மெல்ல மெல்ல அடங்கி இறுதியில் முற்றாக அணைந்து போயிற்று. வானத்தை வியப்போடு பார்த்த காட்டு விலங்குகள் மழையில் நனைந்தது மட்டுமல்லாமல் மகிழ்ச்சியிலும் நனைந்தன. இயற்கையின் விந்தையை எண்ணி வானத்தை நோக்கி நன்றிப் பெருக்குடன் கைகூப்பித் தொழுதன.

கொடுமைக்கார நெருப்பு தன் கொட்டம் அடங்கிக் கிடந்தது.




"இரண்டு வருடகால அவகாசம்
வழங்கப்பட்டுள்ளதாமே ... ஏன் தாத்தா?"

"ஏமாற்றத்தான்... நாம் ஏமாறத்தான்....
அரசாங்கத்தின் பதவிக்காலம்
இரு வருடங்களில் முடிந்து விடும்
பிறகென்ன... புதிதாக வருபவரும்
கால அவகாசம் கேட்பார்...
எதுவும் நடக்காது....
காலம் மட்டும் கடந்து போய்விடும் மகளே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள்



தவறான சேர்க்கையினால்
உருவாகும் சிசுக்களுக்கு
கருவறையே கல்லறையாகி
இழக்கிறதே பிறப்புரிமை.

பால்குடி மறவாத பச்சிளம் குழவிகட்கு
பாசம் பறிபோக சிறகிழந்த பறவைகளாய்
சுதந்திரம் தொலைத்து நிதம்
குழந்தைகள் காப்பகமே சிறைக்கூடமாயிற்று

சபை நடுவே தமிழ் கதைத்தல்
அவமானம் எனக்கருதி
தாய்மொழியை புறம்தள்ளி
இழக்கின்றார் மொழியுரிமை.

கலவரம் உதயமாக நிலவரம் மாறியதே
நிலத்தை விட்டோடி உயிர்காக்க இடம்பெயர்ந்து
சிலகாலம் தவித்தலைந்து மீளவந்தவர்கள்
பரிதவித்துக் கதறுகின்றார் இழந்தோமோ சொத்துரிமை.

உமக்கொன்றும் தெரியாது நீரோ அந்தக்காலம்
எமக்கொன்றும் தேவையில்லை பாழான அறிவுரைகள்
பணத்தைத் தந்துவிட்டு வழியை விடுங்கள் என்றே
பிள்ளைகள் பறிக்கின்றனர் பெற்றோரிடம் பேச்சுரிமை

நிலத்தை நம்பிக் கடன்பட்டுக்கஷ்டப்பட்டு
வான் பொய்க்க வரட்சியினால் விளைச்சலின்றி
விழிபிதுங்கி உயிர் மாய்க்கும் விவசாயிகள்
பரிதாபமாய் இழக்கின்றார் வாழும் உரிமை தனை.



தெல்மா
சடகோபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலுதவியும் அதன் அடிப்படை அம்சங்களும்...



சந்தான்பிள்ளை தேவசகாயம்
(முன்னாள் திருமலை மாவட்ட ஆணையாளர்-
புனித.ஜோன் அம்புலன்ஸ்)
நியூ யோர்க் - USA

**நா**ம் வாழும் சூழலில் விபத்துக்கள், இயற்கை அனர்த்தங்கள், வாகன விபத்துக்கள், சண்டைகள், தவறிவிழுதல், இதய உபாதைகள், பாம்புக்கடி, நஞ்சருந்துதல், மாசு நிறைந்த சூழ்நிலையில் வாழுதல், இரசாயனக் கலவையின் பாவனை, தவறான மின்பாவனை, தீயினால் ஏற்படும் பாதிப்புக்கள் போன்றவற்றால் பலர் மரணம் என்ற துயரமான செய்திகளை நாளாந்தம் ஊடகங்கள் வாயிலாகவும், வாய்மொழியாகவும், எமது காதுகளில் விழுந்த வண்ணம் உள்ளன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் பாதிப்புக்குள்ளானவரை உரிய நேரத்திற்குள் அல்லது முறையான முதுலுதவியினைச் செய்து கொண்டு வந்திருந்தால் நோயாளியைக் காப்பாற்றியிருக்கலாம் போன்ற வார்த்தைகளை வைத்தியர்கள் உட்பட அனைவரும் கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். இவ்வாறானதொரு பின்னணியில், அடிப்படையான சில முதலுதவிகள் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகின்றது.

எமது உறவினர்கள், நண்பர்கள், அல்லது அறியாத ஒருவர் பாதிப்புக்குட்பட்டிருக்கும் போது அவர்களுக்கு முறையான முதலுதவி வழங்கி அவர்களின் உயிரைக்காப்பாற்ற வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதற்கு நாம் அனைவரும் ஓரளவேனும் அடிப்படை முதுலுதவி அறிவைப் பெற்றிருப்பது அவசியமாகின்றது. இவ்வாறான அடிப்படை அறிவு இருந்தால் மட்டுமே எம்மால் பாதிப்புக்குள்ளானவர்களது உயிரைக் காப்பாற்ற முடியும்.

பாதிப்புக்குள்ளானவர் மீது இருக்கும் பாசத்தினால் அல்லது அவர்கள் அனுபவிக்கும் வேதனையினை சகிக்க முடியாமல் இரக்கப்பட்டு அவர்களை காப்பாற்றுவதாக எண்ணி, தவறான முறையில் முதலுதவி வழங்கினால், அது அவரை மேலும் ஆபத்தான நிலைக்கு கொண்டு போய்விடும். எனவே நாம் ஒவ்வொருவரும் ஆபத்தான நிலையிலோ அல்லது நோய்வாய்ப்பட்ட நிலையிலுள்ள ஒருவருக்கு சரியான முறையில் முதலுதவி வழங்குவதற்கான அடிப்படை அறிவையும், அனுபவத்தினையும் பெற்றிருத்தல் அவசியமாகின்றது. இவ்வடிப்படை பயிற்சியினை நமது நாட்டில் இன, மத, மொழி, வயது, பால் வேறுபாடின்றி புனித.ஜோன் அம்புலன்ஸ் (ST.JOHN AMBULANCE), செஞ்சிலுவைச் சங்கம் (RED CROSS) மற்றும் வேறு சில நிறுவனங்களும் அடிப்படை முதலுதவிப் பயிற்சி வழங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலுதவிச் சிகிச்சை முறைகள் சூழ்நிலைக்கும், பாதிக்கப்பட்டவரின் நிலைக்கும் ஏற்ப வேறுபடுகிறது. ஆகவே முறையான பயிற்சி அவசியமாகின்றது. இருப்பினும் சில பொதுவான அம்சங்களை அறிந்து கொள்வதன் மூலம் யாருக்கேனும் பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில், தங்களால் இயன்ற முதலுதவியினைச் செய்து உயிரைக் காக்க முயற்சிக்கலாம். அதற்கான சில விடயங்களை பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முதலுதவி என்பதனை வரையறை செய்கின்றபோது விபத்தின் போது அல்லது நோய்வாய்ப்பட்டுள்ள போது, ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கும், முறைகளுக்கும் ஏற்ப பயிற்றப்பட்ட முதலுதவியாளரால், சூழலில் உள்ள பொருட்களைப் பயன்படுத்தி, மருத்துவ உதவி கிடைக்கும் வரை தற்காலிகமாகச் வழங்கப்படும் உதவி முதலுதவி எனப்படும்.

அதாவது ஒரு வாகன விபத்து அல்லது மரத்திலிருந்து விழுந்ததினால் ஏற்பட்ட பாதிப்பாகவோ அல்லது சில நோயினால் உதாரணமாக மாரடைப்பு, மயக்கம், வலிப்பு, காய்ச்சல், சிசுவலிப்பு, வலிப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவராக இருக்கலாம்.

விபத்தினால் அல்லது நோயினால் பாதிக்கப்பட்டவருக்கு, முதலுதவி செய்யும் போது அனைத்து செயற்பாடுகளும் சில ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான விதிமுறைகளுக்கு உட்பட்டு செயற்படுத்த வேண்டும். உதாரணமாக காயம் ஏற்பட்டு குருதி பெருகும் போது காயப்பட்ட பகுதியில் தூய துணியினால் நேரடியாக அமுக்கி காயப்பட்ட பாகத்தை இதய மட்டத்திற்கு மேல் உயர்த்திப் பிடிக்க வேண்டும். இதனால் குருதிப்பெருக்கினைக் கட்டுப்படுத்தலாம். ஆனால் பாம்புக் கடிக்கு உட்பட்ட ஒருவருக்கு கடிபட்ட இடத்திலிருந்து குருதி பெருகுமாயின், அப்பாகத்தினை இதய மட்டத்திற்கு கீழ் தாழ்வாக வைத்திருத்தல் வேண்டும். இங்கு இரண்டுமே குருதிப் பெருக்குத்தான், ஆனால் வெவ்வேறு விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

இவ்வாறு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வெவ்வேறு விதிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

பயிற்சி பெற்ற முதலுதவியாளர் ஒருவரால் தான், முதுலுதவியினை சரியாகவும், நிதானமாகவும் செய்யமுடியும். இருந்த போதிலும் முதலுதவி பயிற்சி பெற்ற ஒருவர் சூழலில் உள்ள பயிற்சிபெறாத பலரது உதவியினைப்பெற்று தனது பணியினைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

சூழலில் உள்ள பொருட்களை கொண்டு அவசர நேரத்தில் தேவைக்கு ஏற்ப முதுலுதவியாளர் பயன்படுத்துதல் வேண்டும். இருப்பினும், இதற்காக அதிகமான நேரத்தினைச் செலவு செய்தலாகாது.



அதனால் மிகவும் விரைவாக, அதேநேரம் உடலுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில், மிகவும் இலகுவாகக் கிடைக்கக் கூடிய மற்றும் மிகவும் உபயோகமான பொருட்களைப் பயன்படுத்துல் வேண்டும்.

அடுத்த இதழில் தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குறுங்கதை

# மறத்தமிழர் அன்று!




கலாசார மண்டபத்தில் அன்று ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு மாபெரும் பண்டிதர் செந்தமிழில் பெரும் எடுப்பில் பெரும் பேச்சில் விளாசித் தள்ளிக் கொண்டிருந்தார்! அக் கூட்டத்திற்கு சீதாராமனும் போயிருந்தார். சீதாராமனும் தமிழ்ப் பற்றாளர் தான். அதிலும் அவரும் ஒரு தமிழாசிரியரும் கூட! விடுவாரா, இம்மாதிரி கூட்டநாட்டங்களை? அவர் பேச்சை ஆசையாக செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அந்த பண்டிதப் பேச்சாளர், சங்க காலத்திலிருந்து தன் பேச்சை ஆரம்பித்தார். தமிழின் பெருமையை, தமிழர் தம் மகிமையை எல்லாம் சொல்லிக் கொண்டே போனார். முக்கியமாக தமிழர் தம் வீரத்தைத் தான் மிகவும் உணர்ச்சிகரமாக எடுத்தியம்புவதில் கவனமெடுப்பதை காணக்கூடியதாக இருந்தது!

'கங்கை வென்றான், கடாரம் வென்றான், ஆழிக்கடலெங்கும் சோழ மகாராஜன் ஆட்சி புரிந்தானே அன்று', என்றெல்லாம் கவிதைகள் பாடினார்! கரகோசம் எழுந்தது, எல்லோர் முகமும் மலர்ந்தது! நாளைய சாப்பாட்டுக்கு வழியென்னவென்று தெரியாமல் விழிப்பவர்களும், நம் எதிர்காலம் என்ன ஆகுமோ என்று ஏங்குபவர்களும், முகமலர்வோடு கைதட்டி ஆரவாரமிட்டபடி தான் இருந்தனர்!

"மதம் கொண்ட களிறை வேலெறிந்து கொன்ற வீரமறவர்கள் இருந்தார்கள்! கட்டறுந்த காளையை தன் புயபலத்தால் அடக்கிய காளைக்கே மாலையிட்ட மங்கையர் அன்று இருந்தனர்!..." இப்படியாக தமிழர் தம் வீரத்தை அடுக்கடுக்காக செப்பிக்கொண்டே போனார் அந்த செந்தமிழ் பண்டிதர்... அவர் பேச்சை, செந்தமிழ் வீச்சை கேட்டவர் ஆயுதங்களை தூக்கிக் கொண்டு உரிமை வேண்டி புறப்பட்டு விடுவார்கள் போலிருந்தது! அப்படியொரு வீராவேசமான பேச்சு! வேறு பேச்சாளர்களும் பேசினார்கள் தான், ஆனால் இவர் போல் உணர்ச்சிகரமாய் இருக்க வில்லை!... கலை நிகழ்ச்சிகளும் நடந்தேறின. எல்லாம் இனிமையாகவே இருந்தன தமிழ் மணம் வீசின!

கூட்டம் முடிய இரவு ஒன்பதுக்கு மேலாகி விட்டது, சனம் கலைந்து தத்தம் வீடுகளுக்கு போய்க் கொண்டிருந்தது!

இப்போதெல்லாம் யார் தான் கால் நடையில் போகின்றார்கள்? சிற்றூர்திகளும், முச்சக்கரங்களும், உந்துருளிகளும், ஈருருளிகளும் எழும்பிப் பறந்தன!... பிரதம பேச்சாளர் செந்தமிழ் பண்டிதரும் உந்துருளியில் தான் பயணித்தார். அந்தக்கால குதிரைச் சவாரிதான் இந்தக்கால உந்துருளி என்றும் சொல்லலாம்.

சந்தியைக் கடந்து கொண்டிருக்கையில் கூப்பாடு போட்டு மறிக்கப்பட்டார்!... "அடோவ்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்க போறது? நாங் சத்தங் போட்டது கேக்கிறானில்லே!"

பண்டிதர் திணறிக்கொண்டு நிறுத்தினார்! காவல் உத்தியோகத்தர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர்! அவர் அங்கவஸ்திர வேஷத்தை பார்த்ததும் அவர்களுக்கு ஒரு எள்ளல்!...

இந்த நேரம் தான் சீதாராமனும் வந்து கொண்டிருந்தான். பண்டிதர் இராணுவம் சூழ தவித்துக் கொண்டிருப்பது தெரிந்தது! இவரும் நிறுத்தி நின்று நடப்பதை பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.

"அடோவ்! எங்க போறதி? நாங் கூப்பிடுறது காது கேக்கிறானில்லே! நீங் ஹெல்மட் போட்டது. உங்க நோனாவுக்கு ஹெல்மட் போட இல்லே!... நாங் வழக்கு போடப் போறது!"

அப்போது அவர் மனைவியைப் பார்க்க பரிதாபமாயிருந்தது! பூவும், பொட்டும், திருநீற்றுப் பூச்சுமாய் பீதியோடு இருந்தார்!... "ஐயா! உங்கள கெஞ்சி கேக்கிறன், எங்கள அப்படி ஒண்டும் செய்து போடாதையுங்கோ! அவவும் வரக்குள்ள ஹெல்மட்டோட தான் வந்தவ, நான் ஒரு கூட்டத்தில பேசிப்போட்டு வாரன், வரக்குள்ள அவ போட்டு வந்த தலைக்கவசம் காணாமல் போயிற்று! அதால தான் இந்தப் பிழை நடந்து போயிற்று! இனி இப்பிடி நடக்காது, எங்கள இந்த ஒரு தடவ மட்டும் மன்னிச்சு விடுங்கோ ஐயா! உங்கள கெஞ்சி கேக்கிறன்!" அவர் அழுவாரைப் போல் கெஞ்சினார், மனைவியோ அழுதே விட்டாள்!

"அடோவ் கூட்டங் பேசப்போனது!... நீங்தாங் கொட்டியா கொண்டு வாரது! தமிழ்ப்பண்டி!..." என்று சொன்னவன் உதைத்து தள்ளினான்! அவர் உந்துருளியோடு கீழே விழுந்தார்! வண்டிப்பாரம் அழுத்த அவர் கீழே கிடந்து அலறினார்! மனைவியும் கதறினாள்!... இதற்கு மேல் சீதாராமனால் பார்த்துக்கொண்டு இருக்க இயலவில்லை! ஓடிப்போய் அந்தப் பாரமான உந்துருளியை எடுத்து நிறுத்தி, அவரையும் தூக்கி நிறுத்தினார்!

"அடோவ்! இனி ஓடிப்போக ஏலாது உருட்டிக்கொண்டு ஊடு போறது!..."

பாவம் பண்டிதர் அவர்கள் கட்டளைப் பிரகாரம் உந்துருளியை உந்தித் தள்ளி நடையாய் நடக்கலானார்! அவர் மனைவி அலங்காரத்தேர் சோகமே வடிவெடுத்து அவர் பின்னால் போய்க்கொண்டிருந்தது மிகவும் பரிதாபமாக இருந்தது!

இக்காட்சியைக் கண்டு கொண்டிருந்த சீதாராமனுக்கு ஒரேயொரு கேள்விதான் நெஞ்சில் பிறந்தது! "பழந்தமிழர் வீரம் இன்று என்ன செய்யப் போகிறது?"





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழ் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் பேரருட் திரு கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் அவர்களுடனான நேர்காணல்

ஆயரவர்களே! திருகோணமலை மறைமாவட்ட கலைத்தொடர்பு நிலையத்தால் வெளியிடப்படும் "அலைஓசை" சஞ்சிகை தங்களை நேர்காணலில் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

**1981ம் ஆண்டு ஜீலை 3ம் திகதி தங்களை ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் 1992ம் ஆண்டு வரை மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பணியாற்றியுள்ளீர்கள். மன்னார் மறைமாவட்டத்தில் தங்களின் வழிநடாத்தல் பற்றி அறிய விரும்புகின்றோம்.**

மன்னார் மறைமாவட்டம் புதிதாக மலர்ந்த ஒரு மறை மாவட்டமாக இருந்தது. அதற்கு நானும் புதிய ஆயராக இறை பணியாற்ற அனுப்பப்பட்டேன். எல்லாம் புதிதாகத்தான் இருந்தது. ஆரம்பத்தில் எல்லா நிலவரங்களையும் ஆராய்ந்து பார்த்துத்தான் செயற்பட வேண்டி இருந்தது புதிது என்ற படியினால் ஓர் அழைப்பாகவும் இருந்தது. புதிய மறைமாவட்டமாக இருந்த படியால் புதிய திட்டங்களைத் தீட்டவும் புதிய காரியங்களைச் செய்யவும் வேண்டியதாக இருந்தது எனவே ஆர்வத்துடன் புதிய மறைமாவட்டத்தை இறைவனின் துணையுடனும் கொண்டு நடாத்தினேன் குறிப்பாக மருதமடுத் தாயாரின் துணை எம்மோடு இருந்தமையால் நாம் மகிழ்வுடன் செயற்படக் கூடியதாக இருந்தது.

**ஆயரவர்களே தாங்கள் யாழ் மறைமாவட்டத்தில் கடந்த 23 ஆண்டுகள் ஆயராக இறைபணியாற்றியுள்ளீர்கள். இப்பணியை சிறப்பாகச் செய்வதற்குச் சாதகமாக அமைந்த களநிலை பற்றிக் கூறமுடியுமா?**

குறிப்பாக எமது மறைமாவட்டம் ஏனைய மேற்றிராசனங்களைவிட அதிகமான கத்தோலிக்கர்களைக் கொண்ட பகுதியாக



அமைந்திருந்தது. ஆகவே இங்கு பணி செய்வதற்கு மகிழ்ச்சியான களநிலையாக அமைந்திருந்தது.

**நன்றி ஆயரவர்களே! தங்களது ஆயத்துவப் பணிக் காலம் பல இக்கட்டான காலகட்டத்தில் தான் அமைந்திருந்தது. அப்போர்ச் சூழலில் தங்களது பணி வாழ்வைப் பற்றி க் கூற முடியுமா?**

ஆயராகப் பணி புரிந்தபோது எப்போதும் நான் முன் வைப்பது "நான் ஒரு கத்தோலிக்கக்குரு ஒரு துறவி!" ஆகையினால் எனது பணி எப்போதும் ஆயர் பணியோடு சம்பந்தப்பட்டதாகத்தான் இருந்தது. எனவே இப்படியான கருத்து என் மனதில் முதன்மையில் இருந்த படியால் நான் வேறு வேலைகளில், வேறு விடயங்களில் ஈடுபடுவதற்கோ நேரம் இருக்கவில்லை மக்களை இறைவழிப்படுத்துவதில் தான் எனது சிந்தனைப்போக்கு அமைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இப்போர்க் காலச் சூழலில் யாழ் மாவட்டம் முழுவதும் வன்னி பகுதிக்கு இடம்பெயர வேண்டிய சூழல் ஏற்பட்ட போது தாங்கள் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமல்லாது எல்லா தமிழ் மக்களுக்கும் ஆறுதலும் அடைக்கலமும் நம்பிக்கையும் கொடுக்கக் கூடியவராக கருதப்பட்டு இருந்தீர்கள் இந்த அனுபவத்தில் தங்களது நிலைப்பாடு எப்படி இருந்தது?**

எல்லாச் சூழலிலும் எல்லாக் கட்டங்களிலும் நான் முன்னிலைப்படுத்திய கருத்து என்னவென்றால் "நான் ஓர் ஆயன்" இறைவனால் அனுப்பப்பட்டவன். ஆகவே நான் வேறு அலுவல்களிலோ, முயற்சிகளிலோ கவனம் செலுத்தாமல் மக்களை ஆன்மீக வழிப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தி வந்தேன். எனது மறைமாவட்டக் குருக்களின் அனுசரணையும் ஆழமான நேசமும் எனக்கு மிகவும் துணையாக இருந்தது. எந்த நிலையிலும் அவர்கள் எனக்கு ஆதரவாக இருந்தார்கள். எனவே அவர்களுக்கு நான் மிகவும் நன்றி உடையவனாக இருக்கிறேன்.

**ஆயரவர்களே! இலங்கை அரசாங்கமும் தமிழ் போராளிகளும் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களும் கூட தங்களுக்கு மதிப்பளித்ததோடு மட்டுமல்லாமல் தங்களின் கருத்துக்களை உன்னிப்பாக அவதானி-த்தன. இந்த நிலைமைகளை தாங்கள் எவ்வாறு சாணக்கியமாக கையாண்டீர்கள்?**

ஒரு சிலர் என்னை "நான் ஒருபக்கம் சாராமல் நடு நிலையில் நிற்கின்றேன் எனது பணிகளிலே நான் இன்னும் கூடுதலாக ஈடுபாடு காட்ட வேண்டும்" என்று கூறினார்கள். வேறு சிலர் நான் அரசியல் பக்கத்தில் குறிப்பாக விடுதலைப் புலிகள் சார்பாக பேசுகிறேன் என்று என்னைப் பழி சொன்னார்கள். இவ்விதமாக பலரும் பலவிதமாகச் சொன்ன போதும் நான்



எல்லாவற்றிலும் ஈடுபடாமல் நான் ஒரு குரு, ஆயராக அழைக்கப்பட்டவன் எனக்கு வழங்கப்பட்ட ஆயர் பணி மக்களை வழி நடாத்த என்ற நிலையிலேயே ஊன்றி நின்று மக்களை வழிநடாத்தினேன். நான் மக்களுடைய தேவைக்காக மக்களுடைய நம்பிக்கைக்காக மாத்திரம் தான் தொடர்ந்து குரல் கொடுத்தேன். நான் அரசியல் நன்மைக்காகவோ அரசியல் நாட்டங்களுக்-காகவோ குரல் கொடுத்தது கிடையாது. மக்கள் தமது துயர் துன்பங்களிலிருந்து விடுபட வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் நான் இவர்களுக்காக குரல் கொடுத்தேன். ஆகவே எனது கணிப்பானது எப்பொழுதும் எனக்குத் துணையாக இருந்தது. நான் ஒரு குரு ஆயன் ஆன்மவாதி அரசியல் வாதியல்ல என்ற நிலைப்பாட்டில் இருந்தது எப்பொழுதும் எனக்குத் துணையாக இருந்தது.

**ஆயரவர்களே! போரின் இறுதிக் கட்டத்தில் போர் நிறுத்தத்தின் அவசியம் பற்றியும்... அவசரம் பற்றியும் தாங்களும் மன்னார் ஆயரவர்களும் உரத்துக் குரல் கொடுத்து இருந்தீர்கள். இதன் நோக்கம் ஏற்படப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போகும் உயிரிழப்புக்களைத் தடுப்பதே! எனினும் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரசு தங்களின் கருத்தை கவனத்தில் கொள்ளவில்லை. அந்த நேரத்தில் தங்களின் மனோநிலை எப்படி இருந்தது?**

இது ஒரு சிக்கலான கேள்வி என்றாலும், அது மிகவும் ஆழமிக்கது. உண்மை தான் இந்தக் கடைசிக் காலமானது மிகவும் கஸ்டமான காலமாகவே இருந்தது ஏனென்றால் எதைச் செய்வது எந்தப்பக்கம் நிற்பது எது சரி எது பிழை என்றெல்லாம் மிகவும் கஸ்டமான நிலையை உருவாக்கியது. ஆனால் இறைவனின் துணை எப்போதும் எம்மோடு இருந்ததால் இறைவழி நடாத்தலும் உதவியும் எப்போதும் எமக்குக் கிடைத்தது. குறிப்பாக இக்கால கட்டங்களில் அரசியல் பக்கங்களில் சாராமல் நடுநிலையில் நின்று மக்களை வழிநடாத்துவதற்கு துணை புரிந்தேன். குறிப்பாக என்னுடைய குருக்களின் வழிநடாத்தலும் ஆதரவும் அன்பும் எப்போதும் இருந்ததனால் நான் நேராக நின்று பல காரியங்களைச் செய்யக்கூடியதாக இருந்தது மிகக் கஸ்டமான காலகட்டங்களில் இறைவன் எங்களை வழிநடாத்துவார் என்ற நம்பிக்கை எமக்குத் துணை புரிந்தது.

**ஆயரவர்களே! தற்போதைய நல்லாட்சி அரசு தமிழ் மக்களை ஏமாற்றுகிறது அல்லது நெருக்குவாரப் படுத்துகின்றது என்ற கருத்து தமிழ் மக்கள் மத்தியில் நிறைந்த சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. தற்போது ஓய்வு நிலை ஆயராக தங்களைச் சற்று ஆசுவாசப்படுத்திய நிலையில் இதனை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

எப்போதுமே நான் ஒரு சமயவாதி துறவி எந்த நிலையிலும் அரசியல் சிந்தனைகளுக்கல்லாமல் இறைசிந்தனைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பவன் என்ற இக்கட்டான நிலையிலும் கஸ்ட நிலையிலும் இறைவன் நமக்கு கைகொடுப்பார் என்ற உறுதியான நிலைப்பாட்டில் மக்களை வழிநடாத்த வேண்டும் என்பதே எனது பிரார்த்தனையாகும்.

**நேர்கண்டவர்:**
கிறிஸ்டி முருகுப்பிள்ளை

**விளம்பரம்**

2016ம் ஆண்டிற்குரிய தமிழ் மொழி மூல விவிலிய பேச்சுப் போட்டியில் கனிஷ்ட பிரிவில் திருகோணமலை மறைமாவட்டம் சார்பாக பங்கு பற்றிய உவர்மலை பங்கைச் சேர்ந்த **செல்வன். நோயல் டானியல் திகாஸன்** தேசிய ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தகவல் : பெற்றோர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திரகுமார்
(முத்தூர் நிலா)

# மனித உரிமையும் இளைஞர்களும்

வரலாறுகள் எத்தனையோ அறிவியல் மற்றும் உரிமைகள் சார் எண்ணக்கருக்களை மானிடவியலின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் விட்டுச் சென்றிருக்கின்றன. அவ்வாறே சரித்திரங்கள் மனிதனின் தார்மீகத்தையும் மேன்மையையும் படைத்திருக்கின்றன, வளர்த்திருக்கின்றன. ஏன் இன்றும் வளர்த்துக் கொண்டுதான் இருக்கின்றன.

மனிதன் எனும் (Human) தனிப் பதமானது மனிதம் அல்லது மனிதநேயம் (Humanity) எனும் பொதுப் பதத்தை அழித்து ஒழித்து நசுக்கிக் கசக்கிய வரலாற்று உண்மைகளை நாம் கேட்டிருக்கின்றோம், வாசித்திருக்கின்றோம், பார்த்திருக்கின்றோம், அனுபவித்தும் இருக்கின்றோம். ஏன் இந்த நொடிப் பொழுதில் கூட அனுபவித்து அங்கலாய்ப்பவர் கோடான கோடி மக்கள் இவ்வுலகிலே காணப்படுகின்றனர்.

இளைஞர்களே! நீங்கள் சிறப்பானவர்கள்...... தேடலின் சிகரங்கள்.... எனவே எட்டாச் சிகரமான உங்களுடன் மனித உரிமை பற்றிய அடிப்படைகளை பகிர்வதில் மகிழ்ச்சியடைவதுடன் யாவரும் அறிந்திருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்பதனையும் நினைவுபடுத்துகின்றேன்.

இயற்கை அழிவு, பசி, பட்டினி, வறுமை, பிணி, சுரண்டல், இவைகளுக்கப்பால் மனிதனே மனிதனை அழிக்கும் காலம் அன்று தொட்டு இன்று வரை மேலோங்கியுள்ளது என்றால் அது மறுக்க முடியாத உண்மையாகும். நாடுகளை நாடுகள் அடிமைப் படுத்தியமை, கைத்தொழில் புரட்சிகள் வளர்ந்து அரசு இன்னுமொரு அரசுக்கு எதிராகப் போரிட்டமை மற்றும் பாரிய மனித உயிர்களைக் காவு கொண்ட ஏன், அதன் தாக்கத்தால் இன்றும் பாதிப்பை காணக்கூடியதாகவுள்ள உலகப் போர்கள் என்பன மனிதத்துவத்தையும் மனித மாண்பையுமே கேள்விக் குறியாக்கியது. இருப்பினும் 19ம் நூற்றாண்டுகளின் உலகப் போர்கள் மனித உரிமைக்கு வித்திட்டன. 1945 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையானது 1948 ஆம் ஆண்டு மார்கழி 10 திகதி பின்வரும் 30 உறுப்புரைகளுடன் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை பிரகடனம் செய்தது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் - சுருக்கம்**

- மனிதர்கள் எல்லோரும் சமமானவர்கள்
- மனிதருக்கிடையில் பாகுபாடு காட்டாமை
- உயிர் வாழ்வு சுதந்திரம் பாதுகாப்பிற்கான உரிமை
- அடிமைநிலை,சேவகம், பாதுகாப்பு
- சித்திரவதை, மனிதாபிமானமற்ற செயல், தண்டனை– பாதுகாப்பு
- சட்டத்தின் முன் எல்லோரும் ஆளாக மதிக்கப்படல்
- சட்டத்தின் முன் எல்லோரும் சமம்
- உரிமை மீறப்படின் நீதிகேட்கும் நீதிமன்று செல்லும் உரிமை
- எதேச்சையாகக் கைது செய்தல், தடுத்து வைத்தல், நாடுகடத்தலிலிருந்து பாதுகாப்பு
- பகிரங்கமான நீதியான விசாரணை உத்தரவாதம்
- குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதியாகக் கணிப்பு, ஒரு செயல் செய்யப்பட்ட பின் குற்றமாக்கப்பட முடியாது
- அந்தரங்கம் பேணல்
- நடமாடும் உரிமை
- புகலிடம் தேடும் உரிமை
- தேசியத்திற்கான உரிமை
- திருமணம் செய்யும் உரிமை– திருமணத்தில் இருவரும் சமம்
- ஆதனம், சொத்துரிமை
- சிந்தனை, மனசாட்சி, சமய சுதந்திரம்
- கருத்து வெளியிடும் உரிமை, தகவல் பெறும் உரிமை
- சமாதானமாக ஒன்று கூடும் உரிமை, கழகம் சங்கம் அமைக்க உரிமை
- அரசாங்கத்தில் பங்குபற்றும் உரிமை
- சமூகப் பாதுகாப்பு
- தொழில் சம வேலைக்கு சம ஊதியம். தொழில் சங்கம் அமைக்க உரிமை
- ஓய்வு, பொழுது போக்கு
- வாழ்க்கைத்தரம், சுகாதாரம்
- கல்வி உரிமை
- கலாசார உரிமை, விஞ்ஞான வளர்ச்சியில் நலனடைதல்
- உரிமைகள் செயல் வடிவம் பெற சர்வதேச அமைப்பு
- தனிநபர் பொறுப்பும் கடமையும், உரிமைகளின் மட்டுப்பாடுகளும்
- இப் பிரகடனத்தின் ஏற்பாடுகள் மறுக்கப்படுதலோ குறைத்து மதிக்கப்படுதலோ ஆகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்று தொடர்ந்து சிறுவர் உரிமைகள், பெண்கள் உரிமைகள், சித்திரவதைக் கெதிரான பிரகடனம் பாகுபாடுகளை நீக்கும் சமவாயம் அகதிகள் மற்றும் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கான விதிகள் விசேட தேவைக்குட்பட்டோருக்கான உரிமைகள் மற்றும் கைதிகள் பற்றிய விதிகள் சாசனங்கள் பட்டயங்கள் உடன்படிக்கைகள் மற்றும் பின்னேடுகளென பல்வேறு உரிமைசார் எழுத்து வடிவிலான ஆவணங்களை அறிமுகம் செய்துள்ளது. அவற்றை அதன் உறுப்பு நாடுகள் கையொப்பமிட்டு ஏற்று உறுதிப்படுத்தியுமுள்ளன. நமது இலங்கையும் பல பிரகடனங்களில் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

கையொப்பமிட்டு ஏற்றுக் கொள்வதனால் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பது கட்டாயமானதல்ல. எம் நாட்டைப் பொறுத்த மட்டில் அவை பாராளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட்டால் மாத்திரமே அமுல்படுத்தப்படும். மாறாக ஐக்கிய இராச்சியம் ஜேர்மனி, தென் ஆபிரிக்கா போன்ற ஒரு புடை நாடுகள் (Monist Countries) எப்போது சர்வதேச சாசனங்கள் பட்டயங்கள் உடன்படிக்கைகள் மற்றும் பிரகடனங்களில் கைச்சாத்திடுகின்றனவோ அப்போதிருந்தே அவைகள் அந்நாடுகளின் சட்டமாக அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இங்கு மனித உரிமைகள் (HUMAN RIGHTS) மற்றும் அடிப்படை உரிமைகளுக்கிடையிலான (FUNDAMENTAL RIGHTS) வேறுபாடுகளை தெளிவாக்கல் முக்கியமாகும். பொதுவாக இரண்டும் ஒன்று தானென்று பலர் நினைக்கின்றனர். அவ்வாறில்லை சுருக்கமாக மனித உரிமை என்பது ஒரு மனிதனுக்கு பிறப்பினாலே கிடைக்கும் அனைத்து இயற்கை உரிமைகளுமாகும். மாறாக அடிப்படை உரிமை என்பது சட்டங்களால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளாகும். அதாவது அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற உரிமைகளாகும். அடிப்படை உரிமைகள் ஆட்சித்துறை மற்றும் நிர்வாகத்துறை நடவடிக்கைகளால் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மட்டுமே நாம் சட்டநிவாரணங்களைப் பெறமுடியும்.

1972ம் ஆண்டு அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் மட்டுமேசொல்லப்பட்டது. மாறாக 1978 ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அத்தியாயம் III உறுப்புரை 10 தொடக்கம் 14 வரை பின்வரும் அடிப்படை உரிமைகளைக் (சுருக்கம்) கொண்டுள்ளது.

- உறுப்புரை 10 – சிந்தனை, மனசாட்சி மற்றும் மதச் சுதந்திரம்
- உறுப்புரை 11 – சித்திரவதைக்கு உட்படுத்தலாகாது
- உறுப்புரை 12– சமத்துவத்திற்கான உரிமை
- உறுப்புரை 13– கைது
- உறுப்புரை 14– பேச்சு சுதந்திரம் ஒன்றுகூடும் நடமாடும் உரிமை மற்றும் கலாச்சார உரிமை

எவ்வாறாயினும் அமெரிக்க, இந்திய அரசியலமைப்பைப் போன்று நமது நாட்டு அரசிலமைப்பில் உயிர் வாழ்வதற்கான உரிமை வெளிப்படையாக காட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனினும் உறுப்புரை 126 (2) இல் சட்ட நிவாரணம் பெறுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. அடிப்படை உரிமைகள் அல்லது மொழியுரிமை மீறப்பட்டுள்ளது அல்லது மீறப்படவுள்ளதெனச் சார்துமிடத்து அந்நிகழ்ச்சித் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அதுவும் உயர்நீதிமன்றத்தில் (Supreme Court) மாத்திரமே வழக்குத் தாக்கல் செய்யலாம். ஆயினும் உறுப்புரை 15 அடிப்படை உரிமைகள் மீதான மட்டுப்பாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது அறிய வேண்டியதுமாகும்.

மனித உரிமையென்பது பாரிய விடயப்பரப்பாகும். இங்கு சுருக்கமாக விளக்கியுள்ளேன். அடுத்த இதழில் மற்றுமொரு விடயத்துடன் சந்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலை ஓசை ஐந்தின் புதிர் போட்டி முடிவுகள்.

தை, மாசி, பங்குனி 2017 அலை ஓசையில் வெளிவந்த அனைவருக்குமான புனித ஜோசப்வாஸ் அடிகளார் தொடர்பான புதிர்ப் போட்டி முடிவுகள். கிடைக்கப் பெற்ற விடைகளின் அடிப்படையில் சரியான விடை எழுதிய மாணவர்களில் இருந்து குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்ட முதல் மூன்று அதிஸ்டசாலிகளின் பெயர் விபரம்.

**முதலாம் பரிசு: செல்வன். வீ.கிமாலன்**
**(இருதயபுரப் பங்கு)**
**தி/திரு இருதய வித்தியாலயம், திருகோணமலை.**

**இரண்டாம் பரிசு: செல்வி. எல்.எஸ்.பியூரா**
**(பேராலயப்பங்கு)**
**தி/புனித மரியாள் கல்லூரி. திருகோணமலை.**

**மூன்றாம் பரிசு: செல்வி.கே.பவித்திரா. (இருதயபுரப் பங்கு)**
**தி/திரு இருதய வித்தியாலயம், திருகோணமலை.**

மேற்படி புதிர்ப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுப்பணமாக ரூ.300 உரிய பங்குத் தந்தையினூடாக அனுப்பி வைக்கப்படும்.
பங்கு பற்றியவர்களுக்கும், பரிசு பெற்றவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

பரிசு அனுசரணை :
**திரு.யூட் நிரோஷன்**
**பாலையூற்று.**

**அலை ஓசையில் விளம்பரம் செய்ய....**

தங்கள் வியாபார நிலையங்கள், திருமண வாழ்த்துக்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், ஞாபகார்த்த நினைவுகள் போன்ற எல்லா வகையான விளம்பரங்களையும் அலை ஓசையில் விளம்பரம் செய்யலாம்

| | | |
|---|---|---|
| பிற்பக்க முழுவண்ணப்படம் | ரூபா | 5000 |
| உட்பக்கம் (முழுப்பக்கம்) | ரூபா | 4000 |
| அரைப்பக்கம் | ரூபா | 2000 |
| காற்பக்கம் | ரூபா | 1000 |

தொடர்பு.
அலை ஓசை
17, அந்தோனியார் வீதி,
திருகோணமலை
0776771119
trincoalaiosai@gmail.com
*A|C NO; 79003336*
*(BANK OF CEYLON)*

## ஓசையே!



**தாமரைத்தீவான்**
**(ஈச்சந்தீவு - கிண்ணியா)**

பிள்ளை பறக்கும் கிள்ளைதான்,
பிறந்த இன்பம் பேழைதான்!
கொள்ளை அழகின் கூட்டத்தான்,
கொஞ்சும் குறும்பின் வடிவம்தான்!

கூசும் கதிரின் கற்றைதான்,
குளிரும் மதியின் நிலவுதான்!
வீசும் தென்றல் காற்றுத்தான்,
வெள்ளிக்குவியல் மினுக்கந்தான்!

கூவும்குயிலின் குஞ்சுதான்,
கொண்டைமயிலின் ஆடல்தான்!
தாவும் மந்திக்குருளை தான்,
தங்கக்கட்டிச் செல்வம்தான்!

பண்டைத் தமிழின் பாடல் தான்,
பாலும் தேனும் சாறுந்தான்!
கண்டும் பாகும் கரும்புந்தான்,
காதின் மழலை ஓசையே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழாக் காணும் நிலாவெளி மெதடிஸ்த தேவாலயம்




திருமதி.சுகந்தி வரதசீலன்


இங்கிலாந்தின் அப்போஸ்தலன் எனப் பெயர் பெற்ற போதகர் ஜோன் வெஸ்லி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மெதடிஸ்த திருச்சபையானது ஏறத்தாள 250 ஆண்டுகளுக்கு மேலாக உலகில் பல்வேறு நாடுகளில் வாழும் மக்களுக்கு இறையன்பை சுவிசேசமாக எடுத்துச் செல்லும் பணியை முன்னெடுத்து வருகின்றது.

ஒழுங்கு (Method), ஒழுக்கம் (Discipline) சிறந்து விளங்கிய கிறிஸ்தவ மக்கள் கூட்டமே மெதடிஸ்தர் என்ற காரணப்பெயர் பெற்றுக் கொண்டார்கள் அந்த வரிசையில் தம்மை அர்ப்பணித்த அநேகரில் இலங்கை மக்களால் இன்றும் நன்றியுடன் நினைவு கூரப்படுபவர்கள் போதகர் தோமஸ் கோக் தலைமையிலான 06 பேர் கொண்ட அணியினர் 1813ஆம் ஆண்டில் வறுமை, அறியாமை, கல்லாமை என்னும் பேரிருளில் வாழ்ந்து கொண்டிருந்த இலங்கை மக்களைக் குறித்த ஆத்தும பாரம் நிறைந்தவர்களாக தமது நாட்டில் வசதி வாய்ப்புக்களையும், சொத்துக்களையும், சொந்தபந்தங்களையும், தமது இன்னுயிர்களையும் துச்சமென நினைத்தவர்களாய் இலங்கையை நோக்கிப் பாய்க்கப்பலில் தமது பயணத்தைத் தொடங்கினார்கள். பல்வேறு இழப்புக்களைச் சந்தித்தாலும் கூட மனந்தளராமல் 1814ஆம் ஆண்டு யூன் மாதம் 29ம் திகதி இலங்கை கடற்கரை மண்ணில் தடம் பதித்தனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பணியாற்ற ஆரம்பித்த இவர்களைத் தொடர்ந்து இங்கிலாந்து மெதடிஸ்த திருச்சபையிலிருந்து அனேக மிஷனெரிகள் இலங்கை மக்களுக்கென தம் வாழ்வை அர்ப்பணித்து பணியாற்றினர். அந்த வகையில் 200 ஆண்டுகளுக்கு முன் 1817ம் ஆண்டு திருகோணமலை மாவட்டத்தில் மெதடிஸ்த திருச்சபையின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. டொக்யாட் ஆலயத்திலிருந்து தமது பணியை முன்னெடுத்த மிஷனெரிகள், கல்விப் பணியையே முதன்மையாகக் கொண்டு திருகோணமலை நகரை அண்டிய பிரதேசத்திலும் உப்புவெளி, சாம்பல்தீவு, நிலாவெளி, கும்புறுபிட்டி, குச்சவெளி, திரியாய் ஆகிய கிராமங்களில் பாடசாலைகளை ஆரம்பித்து எம் மக்களின் வாழ்வில் அறிவொளியை ஏற்றி வைத்தனர். அதன்பின் சரியாக ஒரு நூற்றாண்டின் பின்பு 1917ஆம் ஆண்டில் நிலாவெளிப் பகுதியில் ஒரு ஆலயம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டது. மெதடிஸ்த பாடசாலையிற் கல்வி கற்று தம்மை வளப்படுத்திக்கொண்ட எம் மக்கள், தாம் பெற்ற நன்மைகளுக்காக இறைவனை நன்றியுடன் ஆராதிக்க முற்பட்டார்கள். இதனால் எல்லோருக்கும் வசதியாக நிலாவெளிப் பகுதியில் இவ்வாலயம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டது. அதன்படி 1917ஆம் ஆண்டு ஜனவரி 20ம் திகதி போதகர் போல் ஏகாம்பரம் அவர்களால் இவ்வாலயம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டதாகவும், அதே ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

அன்று தொடக்கம் இன்றுவரை கர்த்தரின் அன்பை இப்பகுதி மக்களிடம் பகிர்ந்துகொள்ளும் இச்சபையை அவர் அபரிமிதமாக ஆசீர்வதித்து வழிநடாத்தி வருகின்றார். 1960 இற்கு முற்பட்ட காலப்பகுதியில் இச்சபையாரில் பெரும்பான்மையானவர்கள் திரியாய், குச்சவெளி, கும்புறுபிட்டி, நிலாவெளி சாம்பல்த்தீவு பகுதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளர். இதற்கு உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்தும் இவ் ஆலயத்திற்கு வருகை தந்த மக்கள் கூறும் சாட்சிகளும், அவர்கள் அர்ப்பணிக்கும் நன்றிக் காணிக்கைகளும் சான்றாக அமைகின்றது. 'எமது பெற்றோர்,




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மூதாதையர் நிலாவெளிச் சபையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இச்சபையின் மூலம் பெற்ற ஆசீர்வாதங்களையும், கிறிஸ்தவ அனுபவங்களைப் பற்றி அவர்கள் எமக்குக் கூறியுள்ளனர். எம்மையும் கிறிஸ்துவின் அன்பிற்குள் கொண்டுவர அவர்களுக்கு வழிகாட்டிய இவ்வாலயத்தைப் பார்க்க வேண்டுமென வந்தோம்' என்று வாஞ்சையுடன் கூறும் மக்களின் சாட்சி அன்றைய போதகர்கள், உபதேசியார்கள், டிக்கனஸ்மாரின் தன்னலமற்ற சேவையை எடுத்துக் காட்டுகின்றது.

இச்சபையில் பணியாற்றிய ஊழியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்ந்து அவர்களுடைய சேவைக்காக இறைவனைத் துதிக்கிறோம். இச்சபையில் அவர்கள் ஆற்றிய பணிக்காக இம்மையிலும் மறுமையிலும் கர்த்தர் பலன் கொடுப்பார் என விசுவாசிக்கிறோம். பொருளாதாரத்திலும், வசதி வாய்ப்புகளிலும் குறைவு பட்டிருந்த இச்சபையில் அரப்பணிப்புடன் பணியாற்றியதையும், திரியாய் தொடக்கம் சாம்பலத்தீவு வரை வசித்து வந்த திருச்சபை மக்களின் வீடுகளை சந்தித்து அக்குடும்பங்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்பதற்காக அவர்கள் கால்நடையாக சென்று வந்ததையும் இச்சபை மக்களாகிய நாம் நன்றியுடன் நினைவு கூருகிறோம். இச்சபையில் இறைபணியாற்றியவர்களின் சந்ததியையும் கர்த்தர் ஆசீர்வதித்து அவர்களில் அநேகரை தனது பணியில் வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார். ஆரம்ப காலம் முதல் பணியாற்றிய அனைத்து ஊழியர்களின் பெயர் விபரங்களும் கிடைக்கக் கூடியதாக இல்லை.

01. உபதேசியார் திரு.சிதம்பரப்பிள்ளை
02. உபதேசியார் H.D ஜோசப்
03. உபதேசியார் அழகுதுரை
04. உபதேசியார் தங்கராசா
05. டிக்கனஸ் ரோகினி அரியநாயகம்
06. உபதேசியார் வேதநாயகம்
07. உபதேசியார் S.H.செல்வராஜா
08. டீக்கனஸ் ஜேன் ரத்தினம்
09. அருட்செல்வி சு. ரஞ்சிதராணி
10. அருட்செல்வி ஜெயராணி யோவான்
11. அருட்திரு. S.S. ரெறன்ஸ்
12. திரு.வே.வேல்முருகு
13. அருட்செல்வி ஜோதினி சீனித்தம்பி
14. சகோதரி செல்வி
15. அருட்செல்வி ஜெபராணி பீற்றர்
16. அருட்திரு ஏ. மயில்வாகனம்
17. அருட்திரு சீலன்
18. சகோதரி ஜீவமேரி பெருமாள்
19. அருட்திரு நைல்ஸ் ரவிசங்கர்
20. சகோதரன் தமிழ்ச்செல்வன்
21. சகோதரி ரோகினி
22. சகோதரன் ஹமில்ற்றன் யூட்
23. அருட்திரு பஞ்சரெட்ணம்
24. அருட்செல்வி.ஜெயக்குமாரி ரெட்ணசிங்கம்
25. அருட்செல்வி சசிரேகா
26. அருட்திரு து.விஜயநாதன்
27. சகோதரன் து. ஜெபதாசன்

போன்ற ஊழியர்களின் பணிகள் குறிப்பிடத்தக்கவை. இவர்கள் கர்த்தரின் பலத்துடன் தங்களை அர்ப்பணித்துப் பணியாற்றியவர்கள். இங்கு பணியாற்றியவர்களில் சிலர் கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்கள். சிலர் பணியிலிருந்து இளைப்பாறியுள்ளர். பலர் இன்றும் வல்லமையாகப் பணியாற்றி வருகின்றனர்.

இவ்வாண்டு 100வது ஆண்டு விழாவை கொண்டாட இறைவன் அருளிய இச்சந்தர்ப்பத்தில் இவ்ஊழியர்கள் ஒவ்வொருவரையும் பெயர் பெயராக நினைவுகூர்ந்து நன்றி கூறி இவர்களின் பணிக்காக இறைவனை ஸ்தோத்தரிக்கின்றோம். நிலாவெளிச் சபையின் பணிகளை வலுப்படுத்துவதற்கு திருகோணமலை சேகரத்தின் சேகர முகாமைக் குருக்களாகப் பணிபுரிந்தவர்களின் பங்கு அளப்பெரியது. அவர்கள் ஒவ்வொருவரையும் பெயர் பெயராக நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

அத்துடன் எமது சபையிலிருந்து தம்மை கடவுளின் சேவைக்கென்று அர்ப்பணித்துப் பலர் சேவையாற்றி இருக்கின்றனர்.

1. டீக்கனஸ் திருமதி ரோகினி அரியநாயகம்
2. டீக்கனஸ் செல்வி ஜேன் இரத்திம்
3. அருட்திரு.S.சில்வெஸ்ரர் ரெறன்ஸ்
4. சகோதரி திரேசா பிரான்சிஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அருட்திரு ரஞ்சிதராணி ரெட்ணசிங்கம்
6. சகோதரன் பிரபாகரன்

ஆகியோர் நிலாவெளிச் சபை மக்களுக்காக வாழ்ந்து இறைபணியில் இணைந்து கொண்டவர்கள். இந்த சபையிலிருந்து இன்னும் அனேகரை கர்த்தர் தாமே ஊழியத்திற்கு அழைக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

நிலாவெளிச் சபையினுடாக 100 ஆண்டுகள் இப்பகுதி மக்கள் மத்தியில் பணிகள் ஆற்றப்பட்டிருந்த போதிலும், 2004 சுனாமி அனர்த்தத்தின் போதும், 1990ஆம் ஆண்டு யுத்தகாலப் பகுதியிலும், இப்பகுதி மக்கள் பெற்றுக்கொண்ட ஆறுதலும் அடைக்கலமும் குறிப்பிடத்தக்கவை. இக்கிராம மக்கள் அனைவருக்கும் தஞ்சம் கொடுத்தது மட்டுமன்றி பல மாதங்களுக்கு ஆலய வளாகத்தினுள் வசிப்பதற்கும் புகலிடம் கொடுத்து ஆறுதல் படுத்தியது இச்சபையே. இழப்புக்களைச் சந்தித்த மக்களை ஆறுதல்படுத்தும் இயேசுவின் அன்பை ருசிபார்க்க இச்சபையாரும் ஊழியர்களும் உதவியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக 1990ம் ஆண்டு யுத்தத்தின் கோரப்பிடியில் சிதைக்கப்பட்ட குடும்பங்களின் சிறுவர்களை அரவணைக்கும் ‘அருளகம்’ என்னும் சிறுவர் இல்லம் இச்சபை வளாகத்தினுள் ஆரம்பிக்கப்பட்டது. காலப் போக்கில் நிலாவெளியில் ‘அருளகம்’ மெதடிஸ்த சிறுவர் இல்லமாகவும், பரிமாணம் பெற்று 500க்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமியருக்கு கல்வி ஒளியூட்டியது.

இவ்வில்லங்களிலிருந்து இறைவனின் ஆசியுடன் வளர்ந்த பிள்ளைகள் இன்று சமுதாயத்தில் உயர்ந்த பொறுப்புக்களை வகிப்பதையும், பொறுப்புள்ள குடும்பத் தலைவர்களாக வாழ்வதையும், சிறந்த நிலையிலிருப்பதையும் காணக் கூடியதாக உள்ளது. பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், வங்கி ஊழியர்களாகவும், அலுவலக நிர்வாகிகளாகவும், ஆசிரியர்களாகவும், தாதிகளாகவும் மட்டுமன்றி பல்வேறு திறமைகளையும், ஆற்றல்களையும் கொண்டவர்களாக உருவெடுப்பதற்கு இச்சபைப் பணியாளர்களும், இச்சபை மக்களும் உதவினார்கள்.

கடந்த காலங்களில் எல்லாம் கர்த்தரின் கிருபையுள்ள கரம் இச்சபையார்களோடும்,



நிலாவெளி மெதடிஸ்த தேவாலயம்

ஊழியர்களோடும் கூட இருந்ததை நன்றியுடன் நினைவுகூருகின்றோம். அனேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி வழிநடத்த ஊழியர்களுக்குப் பலன் கொடுத்த ஆண்டவர் தாமே இனிவரும் நாட்களிலும் அனேக மக்கள் கிறிஸ்துவின் அன்பை ருசித்து அவருடைய இரட்சிப்புக்கூடாகக் கடந்து வரக் கிருபை கூற வேண்டும் என்றும் தொடர்ந்து வரும் காலங்களில் கர்த்தர் இந்தச் சபையை ஆசீர்வதித்து வழிநடாத்தி வரவேண்டுமெனவும் ஜெபித்துக் கொள்வோம்.

நூற்றாண்டு விழா தொடர்பான நன்றி வழிபாடும் ஏனைய நிகழ்வுகளும் இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 3ம், 4ம், 5ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

“கர்த்தர் ஒருவருக்கே கனமும் மகிமையும் துதியும் உரித்தாகட்டும்”

நன்றி

**தேவை :**

**அச்சகம் ஒன்றில் பணியாற்றுவதற்கு கணனி வடிவமைப்பாளர் தேவை.**
**பயிற்சியும் வழங்கப்படும்.**
**தொடர்புகளுக்கு : 0777555738**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவனிக்கப்படாத பாதை



உலகம் பூராகவும் திருச்சபையானது மனிதநேயப் பணிகளுக்குப் பெயர் போனது. இயற்கையாகவோ மனித உருவாக்கத்தினாலோ எங்கெங்கெல்லாம் அனர்த்தம் நடைபெற்றதோ அங்கே திருச்சபை பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு என்ற மையத்தில் தன்னுடைய அர்ப்பணத்தை மிகத் திறமையுடன் காட்டியுள்ளது. ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை ஏழைகளுக்கும் நலிவுற்றவர்களுக்கும் இரக்கத்தினூடாக எடுத்துச் செல்வது பாராட்டப்படக் கூடிய விடயமாகும். இதற்குத்தான் திருச்சபை உள்ளது. இந்தத் தளத்தினூடாக திருச்சபை ஏழைகளுக்கான நற்செய்தியை அறிவிக்கின்றது.

**அப்படியென்றால் மிகக் குறைவாக நாங்கள் பயணித்த அல்லது பயணம் செய்த பாதை என்ன?**

அக்கறையில்லாமலும் குறைந்த அளவிலும் பேசப்பட்டு எங்களுடைய பிரசங்க மேடையில் அறிவிக்காத விடயம் யாதெனில் ஆய்விற்கான விடயம் சமூகப் பணியின் தன்மையும் சமூகம்சார் கோட்பாட்டின் நிலமைகளுமாகும். ஆண்டவர் இயேசுவின் நற்செய்தி, சமூகம் சார்ந்த கண்ணோக்கில் எங்களுடைய மக்களுக்கும் பொருள் கோடல் செய்யப்பட்டு விடுதலைக்காகவும் மீள் இணக்கத்திற்காகவும் இலங்கைதாய் நாட்டிலும் திருச்சபையிலும் போராடிக் கொண்டிருக்கின்ற எம் மக்களுக்கு லூக்கா நற்செய்தியினூடாக ஆண்டவர் இயேசு தனது பணிவாழ்வின் அத்திவாரத்தை ஆரம்பிக்கும் போது "ஆண்டவர் என்னை அபிஷேகம் செய்துள்ளதால் ஏழைகளுக்கு நற்செய்தி அறிவிக்கவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்யவும் அனுப்பப்பட்டேன்" என்றார்.

அவர் தன்னுடைய சமூகத்தில் கண்ட பலவகையான அடக்குமுறை செயற்பாடுகளிலிருந்தும் மக்கள் விடுதலை அடைய வேண்டுமென்று குரல் கொடுத்தார். அது அரசியலாகவோ கலாச்சார வடிவங்களாகவோ ஏன் சமய அடக்கு முறைகளாகவும் காணப்பட்டது.

அரசியல் தலைமைத்துவத்தை நீங்கள் அநீதியான சட்டங்களை இயற்றி மக்களை ஒடுக்கக் கூடாதென்றும், சமூகத்தினால் ஓரங்கட்டப்பட்ட ஆயக்காரர்களையும், பாவிகளையும் அரவணைத்தும் இனக் கலாசார தடைகளுக்கப்பால் உயர்ந்து தன்னுடைய அன்பின் அரவணைப்பில் சமாரியர்களையும் கிரேக்கர்களையும் உரோமர்களையும் அரவணைத்தும் சமயத் தலைவர்களான பரிசேயர்களையும் மறைநூல் அறிஞர்களையும் மனந்திரும்பி இறைவார்த்தையை அறிவியுங்கள் என்றும் குரல் கொடுத்தார்.

இதற்காக "கல்வாரியின் சிலுவையில் தன்னுடைய உயிர் அர்ப்பணத்தில் தன்னுடைய வெகுமதியைக் கொடுத்தார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நாம் கொண்டாடிக் கொண்டிருக்கும் அல்லது கொண்டாடிக் கொண்டிருப்பது உயிர்துடிப்புள்ள அவருடைய நற்செய்தியான பாஸ்கா விழாவாகும் அதாவது உயிர்ப்பு விழாவைக் கொண்டாடுகின்றோம்.

இறைவன் அவரை மரணத்திலிருந்து உயிர்த்தெழச் செய்து மகிமைப்படுத்தியுள்ளார். இந்த பாஸ்கா காலத்தில் நாங்கள் வாசிக்கின்ற கேட்கின்ற செவிமடுக்கின்ற இறைவார்த்தை இந்த நற்செய்தியைத் தான் நிறைவாக எடுத்துச் சொல்கின்றது.

தன்னுடைய விருப்பத்திற்கு பணிவுடன் செயலாற்றி தன் இன்னுயிர் நீத்த தன் மகனுக்கு இறைவன் கொடுத்த அழிக்க முடியாத பரிசு அவரின் உயிர்த்தெழுதலாகும்.

தந்தையின் விருப்பம் அல்லலபடும் இவ்வுலகத்தை தன்னோடு ஒப்புரவாக்குவது. இது அவருடைய திருமகன் இயேசுக் கிறிஸ்துவின் கீழ்படிதலினூடாக அன்பின் நற்செய்தியில் மனுக்குலத்தை அரவணைத்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நிமிர்ந்து நின்று தன்னுடைய உயிரைக் கையளித்ததின் ஊடாக நிறைவேறியது.

நான் பேச வருகின்ற குறைந்தளவில் நடந்த பாதை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நிமிர்ந்து அல்லது எழுந்து நின்ற பாதையே! எமது திருச்சபை முழுமையாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக நின்று ஒலிப்பது தார்மீகக் கடமையாகும்.

எங்களுடைய திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு நல்ல உதாரணமாகவும் தன்னுடைய சொல்லாலும் செயலாலும் இந்த நற்செய்தியை அறிவிக்கின்றவராகவும் இருப்பதை நாம் உணரவில்லையா? இல்லாவிட்டால் வத்திக்கான செய்திகளை தொடர்ந்து கவனியுங்கள். அவர் என்ன பேசுகின்றார் தினமும் என்ன செய்கின்றார் என்பது எங்களுக்கும் உங்களுக்கும் திருச்சபை பற்றியும் அதன் குறிக்கோள் பற்றியும் தெளிவாகக் கூறும்.

திருத்தந்தை இலங்கைக்கு விஜயம் செய்த போது அவர் முகாம்களில் வசித்த எமது மக்களை சந்தித்து இந்த செய்தியை ஆணித்தரமாகக் கூறவில்லையா? எங்களது தாய்திருமண்ணில் அவர் வைத்த முதல் அடியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களினதும் ஒடுக்கப்பட்டவர்களினதும் ஏழைகளினதும் பக்கத்தில் நீங்கள் நிற்கவேண்டும் என்று கூறவில்லையா? அந்த அடிச்சுவட்டில் நாம் நடந்துள்ளோமா?

அவ்வாறு நாம் நடந்திருந்தால் இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது எனக் கேட்டு நிகழ்த்தும் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஐம்பது நாட்களை தாண்டி இருக்க முடியாதல்லவா?

இராணுவத்தினரால் சொந்த நிலங்கள் அபகரிக்கப்பட்டு தங்கள் காணிகளுக்குள்ளும் கிராமங்களுக்குள்ளும் போக முடியாமல் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் தங்கள் கிராமங்களைக் கையளிக்குமாறு தவமிருக்கின்றனர்களே! எமது பிள்ளைகளான வேலையற்ற பட்டதாரிகள் தொழிலொன்றிற்காக ஏக்கத்துடன் வீதிகளில் உணவு தவிர்ப்பு போராட்டம் நிகழ்த்துகின்றார்களே எதுவும் கண்ணில் படவில்லையா?

இதற்குமப்பால் இன்னும் அநேகர் .... சித்திரவதைக்குள்ளானோர், அரசியல் கைதிகள், படுகொலை செய்யப்பட்டோரின் குடும்ப உறுப்பினர்கள், யுத்தத்தினால் அங்கவீனமுற்றோர், யுத்த விதவைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருட்பணி வீ.யோகேஸ்வரன் (SJ)-A
இயக்குனர், மனித உரிமை மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான நிலையம்
238, உட்துறைமுகவீதி, திருகோணமலை
தொடர்பிலக்கம் : 026 326 0895
(மேலதிக விபரங்கள் மற்றும் சட்ட உதவிகளையும் நாடலாம்)

இன்னும் பலர் எமது நாட்டில் நீதிக்கும் இழப்பீட்டிற்கும் குரல் கொடுத்து மீள் இணக்கத்தையும் தேடுகின்றார்களே!

"ஆண்டவருடைய குரல் விண்ணகத்திலிருந்து ஒலிக்கின்றது" விடுதலைப் பயண நூலில் ஆண்டவர் கூறுகின்றார் அடக்கி ஒடுக்கப்பட்டு எகிப்து நாட்டில் வேதனைப் படுகின்ற மக்களை நான் பார்க்கின்றேன் அவர்களின் விடுதலைக்காக உன்னை நான் அனுப்புகின்றேன் என் மக்களை நான் வாக்களித்த நாட்டிற்கு அழைத்துச் செல்" இது ஆண்டவர் மோயீசனுக்கு கூறியது. இந்தக் குரல் இன்னும் மௌனித்துவிடவில்லை.

நாம் சுதந்திரமடைந்து விடுதலை பெற்றுமீள் இணக்கத்தில் ஒப்புரவாகியுள்ளோம் என்று எமது நாட்டில் ஒவ்வொரு மனிதனும் அல்லது ஒவ்வொரு ஆணும், பெண்ணும், குழந்தையும் கூறும் வரை இறைவனின் குரல் ஒலித்துக் கொண்டிருக்கும்.

எங்களுடைய குழந்தைகளுக்கு ஓர் நல்ல எதிர்காலத்தைக் கொடுப்பதற்கு இந்த இக்கட்டான சூழலில் திருச்சபை ஆகிய நாம் ஆற்ற வேண்டிய பணிகள் நிறையவே உள்ளன. நாங்கள் தான் திருச்சபை. நாங்கள் என்றால் திருத்தந்தை, கர்தினால், ஆயர், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர். இந்த இறை அழைப்பு நம் அனைவருக்குமே என்பதை உணாந்து கொள்வோம்.

இங்கு எமது தியானம் மற்றும் செபத்தினூடாக ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் நாம் இறங்க வேண்டுமாயின் முதலில் நமது நாட்டில் என்ன நடைபெற்றது, என்ன நடைபெறுகின்றது என்பதனை அறிந்து கொள்வதும் நமது கடமையாகும்.

2009 யுத்தம் நிறைவு பெற்றது. அத்தருணமிருந்து எமது அரசாங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பொறுப்புக் கூறலைத் தட்டிக் கழித்தது. நீதிக்கும் மீளிணக்கத்திற்குமான செயற்பாடுகளைப் புறக்கணித்தது. இதன் பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையினுடைய கடப்பாடுகளை வலியுறுத்திப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதனூடாக இலங்கையை, பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக பொறுப்புக் கூறல் நீதிக்கும் அர்த்தமுள்ள மீளிணக்கத்திற்கும் இட்டுச் செல்ல வேண்டுமென்று வலியுறுத்தப்-பட்டது.

2015ம் ஆண்டு அரசியல் மாற்றமொன்று ஏற்பட்டது. தற்சமயம் அரசுப் பொறுப்பை ஏற்றிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசு நல்லாட்சி என்ற பெயரில் இந்நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்ற கோஷத்துடன் பொறுப்புக் கூறல் கடப்பாட்டை ஏற்றுக் கொண்டு 2015 புரட்டாதிமாதம் மனிதஉரிமை பேரவையில் இலங்கை அரசானது இணக்கப் பாட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த அரசும் எதிர்பார்த்தபடி தன்னுடைய கடப்பாடுகளை நிறைவேற்றவில்லை.

இதன் பின்னணியில் இவ்வருடம் (2017) பங்குனி மாதத்தில் ஐக்கிய நாடுகளிடமும் சர்வதேச சமூகத்திடமும் இரண்டு வருட கால அவகாசம் கோரியது. இதை ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை ஏற்கனவே ஏற்றுக் கொண்ட தீர்மானத்தின் அடிப்படையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தில் சொல்லப்பட்ட விடயங்களை நிறைவேற்ற இரண்டு வருட கால அவகாசம் கொடுத்தது.

நீதி, இழப்பீடு, மீளிணக்கம் பற்றிய ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும். இதன் பின்னணியில் இலங்கை அரசு ஏற்கனவே வாக்குறுதி அளித்தபடி உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு, காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், நீதிக்கான கலப்பு நீதிமன்றம், மீள்நிகழாமைக்கான புதிய அரசியல் யாப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, காணிகள் விடுவிப்பு உள்ளடங்கலாக இன்னும் சில சீர்திருத்தங்களைச் செய்யும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

அரசாங்கம் இதயசுத்தியுடன் செயற்பட்டிருந்தால் எமது மக்கள் தெருவோரங்களில் இன்று தவமிருக்கமாட்டார்கள். எமது நாடு ஒரு பயணத்திலுள்ளது. எமது மக்கள் விடுதலையை நோக்கி நீண்ட பயணத்தை மேற்கொண்டுள்ளார்கள். நாங்கள் இந்த வண்டியில் ஏறிவிட்டோமா? அல்லது இன்னமும் வெளியில் தான் நிற்கின்றோமா?

**ஆகவே அமைதியான பார்வையாளராக இருப்பதை விடுத்து சிறந்த தலைமைத்துவத்தில் நாட்டையும் மக்களையும் காப்பாற்றும் கடப்பாட்டை நாம் கொண்டு உள்ளோம்.**

**ஆகவே மிகக் குறைவாக நடந்த பாதையில் எமது மக்களுக்காகப் பேசுவோம் அல்லது குரல் கொடுப்போம்.**

◈◈◈ ◈◈◈

## நிலாவெளியில் அருள்மழை பொழியும் சூசையப்பர்



**நி**லாவெளியின் மத்தியிலோர் கோயில்
நித்தமருள் புரியுமிறை வாயில்
அலையலையாய் மக்கள் கோடி வருவார்
அனைவருக்கும் புனிதவள னாரருளைச் சொரிவார்

ஏசு பாலன் தனை வளர்த்த தந்தை.
இனிமை மிகும் அருள் நிறைந்த சிந்தை
மாசிலாத மாதாவின் நேயன்
மக்களெல்லாம் மகிழ்ந்தேற்றும் தூயன்

ஏழைமக்க ளனைவருக்கும் தோழன்!
இடருற்றோர் துயர்கலைக்குமன் பாளன்.
வாழவழி மறந்தோர்க் கருள் விளக்கு
வழித்துணையாய்ச் செல்லுமன்பின் இலக்கு.

பகைவெறியர் சூழ்ந்திருந்த வேளை
பயம்நீக்கி மக்களுயிர் காத்தார்
புகலிடங்கள் கொடுத்தவரை அணைத்தார்
புனிதமுடன் குடை நிழலுள் இணைத்தார்!

எக்குறையும் நீக்கவல்லார் சூசை
எம்மதத்து மக்களுக்கும் தாதை
சிக்கல் எவர்க்குற்றாலும் தீர்ப்பார்
இருட்டினிலும் உரிய இடம் சேர்ப்பார்!


உப்பளமும். நெல்வயலும் இன்னும்
உள்ளபயிர் வகைகளெல்லாம் மின்னும்
செப்பமுடன் நிலாவெளியூர் செழிக்கும்
செழிப்பதற்கு புனிதவளன் அருள்
மழையை அளிக்கும்...



அருட்பாவலர் நிலா தமிழின்தாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



[illegible]வுணாவில் என்ற அடர்ந்த காட்டின் நடுவே மகாவலி கங்கையை அண்மித்ததாக ஆச்சிரமம் ஒன்று இருந்தது.

அந்த ஆச்சிரமத்தின் பிரதான குருவாக சிஷ்யானந்தர் என்பவர் ஏறத்தாழ நூறு இளம் மாணாக்கர்களுக்கு ஆன்மீகமும் (சமய போதனை), நற்பண்புகளையும் கற்பித்து வந்தார்.

அன்று ஒரு நாள் காலை நற்பண்புகள் பற்றி குரு சிஷ்யானந்தர் போதிக்கும் போது உண்மை பேசி, உண்மையாக வாழ வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் பொய் பேசலாகாது. உண்மையையே பேச வேண்டும்! என போதித்தார்.



-கனகசபை தேவகடாட்சம்.

# குருவை மிஞ்சிய சீடன்.

குருவின் போதனைகளை கோபி என்ற சிறுவன் குறுக்கீடு செய்து புரியாத விடயங்களுக்கு பதில் கேட்பான். குருவும் பொறுமையாக பதில் சொல்வார். குரு சொல்வதெல்லாவற்றையும் முழுமையாக ஏற்க மாட்டான். சிலவற்றுக்கு எதிர்வாதமும் செய்வான். அதையிட்டு குரு கோபப்படுவதில்லை. குருவுக்கும் கோபியோடு விருப்பம் இருந்தது.

ஒருநாள், குருவான சிஷ்யானந்தர் மாணவர்களுக்கான வகுப்பை முடித்துவிட்டு பக்கத்து கங்கையில் நீராடச்செல்ல ஆயத்த-மாகிக் கொண்டு கோபியையும் இன்னும் சில மாணவர்களையும் அழைத்தார். கோபி உட்பட சில மாணவர்களும் குருவோடு இணைந்து நீராட கங்கைக்கு சென்றார்கள்.

ஆனந்தமாக நீராடிவிட்டு குருவோடு கோபியும் மாணவர்களும் கங்கையைவிட்டு வெளியேறி ஆச்சிரமத்தை நோக்கி காட்டுப் பாதையால் நடந்து வந்து கொண்டிருந்தனர்.

நடுக்காட்டினுள் உள்ள அடர்ந்த புதரினூடாக ஆண் மானும், பெண் மானும் குட்டிகளோடு பாய்ந்து சென்றன. ஆரம்பத்தில் மாணவர்கள் சிலர் பயங்கர மிருகங்கள் என எண்ணி வாய்விட்டு அலறினர். பின்னர் மான்கள் என அறிந்து சுமுக நிலைக்கு வந்தனர். மான்கள் பாய்ந்து சென்று சில நிமிடங்கள் கழிந்த பின்னர் இரு மனிதர்கள் மான்கள் சென்ற தடம் தேடி அம்பு, வில்லோடு ஓடி வந்தனர்.

"இவ் வழியால் ஓடி வந்த மான்கள் எவ்வழி-யால் ஓடின?" என மாணவர்களை நோக்கி கேட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே கோபி, 'அவை இந்த வழியால் தான் ஓடின, மான்கள் களைத்து விட்டன போல் உள்ளன. நீங்கள் விரைவாக சென்றால் அம்பு எய்து விடலாம்' என மான்கள் ஓடிய திசையை மாற்றி வேறு திசையைக் காட்டி அம் மனிதர்களை ஓட வைத்தான். அவர்களும் வேறு திசையால் ஓடினார்கள்.

அப்போது குருவான சிஷ்யானந்தர் கோபி-யைப் பார்த்து கேட்டார்... 'இடைமறித்து விளக்கம் கேட்கின்ற கோபி! இதற்கு விளக்கம் சொல்! நான் உனக்கு உண்மையைக் கூற வேண்டும் என்றுதானே கற்பித்துத் தந்தேன். எனது போதனையை அலட்சியம் செய்வது போல் அந்த வேட்டைக்காரர்களுக்கு ஏன் பொய் கூறி அவர்களை வேறு திசைக்கு அனுப்பி வைத்தாய்? எனது போதனை பயன்படாமல் போய் விட்டதே!' என்றார்.

உடனே கோபி, 'குருவே! நான் பொய் சொல்லவில்லையே, உண்மையைத் தானே கூறினேன். உங்கள் போதனைக்கு மாறாக ஒரு போதும் நடக்க மாட்டேன்' என்றான்.

'என்ன! உண்மை சொன்னாயா? நீ சொன்ன உண்மை தான் என்ன?' என்று சற்று கடுமையான குரலில் குரு கேட்டார்.

கோபி கூறினான் 'குருவே! திருவள்ளுவரின் கூற்றுப்படி உண்மையைத்தான் கூறினேன்.' என்ற படி மனதில் கிடந்த குரு சொல்லிக் கொடுத்த அந்தக் குறளை ஒருவாறு நினைவு-க்குக் கொண்டுவந்து கூறினான்.

**"பொய்மையும் வாய்மை யிடத்த புரை தீர்ந்த
நன்மை பயக்கு மெனின்"**

என்றான். மேலும் விளக்கத்தையும் மற்ற மாணவர்களுக்கு புரியும்படி குருவைப் பார்த்து கூறினான்.

'அதாவது, குற்றம் நிகழாமல் நன்மை ஏற்படுமாயின் பொய்யாக கூறுகின்ற வார்த்தைகள் யாவும் உண்மையாகும் என வள்ளுவர் கூறியதை போதித்தவரே நீங்கள் தானே குருவே. தப்பி ஓடுகின்ற மான் கூட்டத்தின் உயிருக்கு தீங்கு வராமல் காப்பாற்றுவதற்கே இந்தப் பொய்யை கூறினேன் அதனால் அந்த உயிர்கள் காப்பாற்றப்பட்டன. தாங்கள் கூறியபடி உண்மையைக் கூறியிருந்தால் அந்த உயிர்கள் இந்தளவும் மடிந்திருக்கும் அவற்றைக் காப்பாற்றவே அந்தப் பொய்யைக் கூறினேன் வள்ளுவர் கூற்றுப்படி அஃது உண்மையே எச்சந்தர்ப்பத்திலும் பொய்யைக் கூறக்கூடாது என்று கூறிய நீங்கள் தான் இந்தக் குறளையும் சொல்லித்தந்தீர்கள்' என்றான்.

குருவுக்கு சங்கடமாக இருந்தாலும் கோபியின் கூற்றில் உண்மை தெரிந்தது. அடிக்கடி குறுக்கீடு செய்து கேள்வி கேட்கும் கோபியின் ஞானம் இப்போது குருவிற்கு புரிந்தது.

வாழ்க்கையின் நடைமுறை யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட கோபியின் தலையைத்தடவி தன்னை மிஞ்சிய அறிவை மெச்சியவாறு வாழ்த்துக்களைக் கூறினார் குரு.



◆◆◆ ◆◆◆

# கிரேக்க மெய்யியல்



திருவிவிலிய மொழி பெயர்ப்பு

சுரேந்தினி மணிவண்ணன்

உரோமப் பேரரசில் இலத்தீன் மொழியின் செல்வாக்கு அதிகரித்தமையினால் திருவிவிலியத்தையும் இலத்தீன் மொழியில் மொழி பெயர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.
கி.பி 390 இல் தமாஸ்கஸ் (Damascus) என்னும் திருத்தந்தை இலத்தீன் திருவிவிலியத்தை மாற்றியமைக்க விரும்பி கிரேக்கம், எபிரேயம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றிருந்த தூய ஜெரோம் என்பவரிடம் இப்பணியை ஒப்புவித்தார்.
கி.பி 4ஆம் நூற்றாண்டின் இறுதியில் தூய ஜெரோம் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட திருவிவிலியத்தின் இலத்தீன் மொழிபெயர்ப்பே "வுல்காத்தா" (vulgate) என அழைக்கப்பெற்றது.
இங்கு பயன்படுத்தப்படும் "வுல்கத்துஸ்" என்பது பொதுமை, எளிமை எனப் பொருள்படுவதோடு எளியவர்களுக்கும் விளங்கும் வண்ணம் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது எனப் பொருள்படும்.
கி.பி 1546 ஆம் ஆண்டில் இடம் பெற்ற திரிதெந்து சங்கத்தில் "வுல்காத்தா" என்னும் இலத்தீன் மொழி பெயர்ப்பு வழிபாட்டிற்கு ஏற்றதாக அதிகார பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கட்டடக் கலை :-**

உரோமர்கள் கட்டிடக் கலையில் சிறந்து விளங்கினர் என்பதற்கு இவர்களால் நிர்மாணிக்கப்பட்ட பொதுப்பாதைகள், பாலங்கள், அணைக்கட்டுகள், துறைமுகங்கள், களியாட்ட அரங்குகள், நீர்த்தேக்கங்கள் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.
இவர்களது பசிலிக்கா கட்டிட அமைப்பு முறையை அடியொற்றியதாக கிறிஸ்தவ பசிலிக்கா ஆலயங்கள் அமைக்கப்பட்டன.
கொன்தாந்திநோபிள் என்னும் இடத்தில் தூய ஆவியின் பெயரால் ஆலயமும் கல்லாரி மலையில் கல்லறை ஆலயமும், ஒலிவ மலையில் ஆரோபண ஆலயமும், பெத்லகேமில் கிறிஸ்து பிறப்பு ஆலயமும் நிறுவப்பட்டன. இந்த ஆலயங்கள் எல்லாம் பசிலிக்கா வடிவமைப்பைக் கொண்ட ஆலயங்களாகவே அமைக்கப்பட்டன.
பசிலிக்காவின் அமைப்பு நீள் சதுர வடிவமைப்பைக் கொண்டவையாகவும், அதன் நீள்பகுதி மூன்று பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டதாகவும், அவற்றுள் ஒன்று நடுப்பகுதியாகவும், மற்றையவை நடுப்பகுதியுடன் இணைந்த இருமருங்கிலும் அமைந்த பகுதியாகவும் காணப்பட்டன.

**அரசியல் அமைப்பு முறை :-**
உரோமர் சமூக அடிப்படையிலே இரு பெரும் பிரிவுகளைக் கொண்டனர். முதலாவது பற்றீசியன், இரண்டாவது பிளேபியன்ஸ்

**பற்றீசியன் -** இவர்கள் 10 வீதத்தினராகக் காணப்பட்ட போதும், பெரும் பகுதியினர் நிலவுடமையாளராகவும், ஆட்சியில் கூடிய பங்கு வகிப்பவர்களாகவும் காணப்பட்டனர். உரோமய சமூக அமைப்பில் அதிக செல்வாக்குப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர்.

**பிளேப்பியன்ஸ் -** 90 வீதமானவர்கள் இந்த வகுப்பைச் சார்ந்தவர்கள். இவர்களில் சிறு வர்த்தகர்கள். சிறு விவசாயிகள், சிறு கைத்தொழிலாளர்கள், சிறுபகுதி நிலத்தை உரிமையாக்கிக் கொண்டவர்களும் உள்ளடங்குவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4ம் நூற்றாண்டின் முதல் உரோமயில் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க கிறிஸ்தவர்களை அங்கிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதோடு அவர்களது சமூக அந்தஸ்தும் உயர்ந்தது.
திருச்சபையிலும் குருக்கள், (clergy) பொதுநிலையினர் (laity) என்னும் தெளிவான வேறுபாடு வளரலாயிற்று.
இந்நிலையில் உரோமய அரச நிறுவனங்களின் தன்மைகளின் தாக்கங்களைக் காணலாம்.
முக்கோண வடிவமைப்பைக் கொண்ட படிமுறை அதிகார அமைப்பு நிலை உரோமய அரசியல் சமூக மட்டத்தில் காணப்பட்டது.
இந்த அமைப்பு முறையில் முக்கியமான நகரத் திருச்சபையை நிர்வாகிக்கும் அதிகாரம் கொண்டவராகப் பேராயரும், ஏனைய நகரங்களுக்கு ஆயர்களும், பங்குகளுக்கு குருக்கள், திருத்தொண்டர்கள், துறவியர் என்றும் இதன் உச்ச நிலையாகத் திருத்தந்தையும் காணப்படுகின்றார். இவ்வதிகாரப் படிமுறையில் பொது நிலையினர் அடிமட்டத்தில் உள்ளவர்களாகக் காணப்படுகின்றனர்.
திருச்சபையின் செயற்பாடு பற்றிய முக்கிய தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பும், செயற்படுத்தும் அதிகாரமும் குருக்களிடமே காணப்பட்டது.
பொது மக்களின் பங்கும் செயற்பாடும் அரிதாக அல்லது முற்றாக அற்ற நிலையே நிலவியது. எனினும் உரோமர்கள் மத்தியில் பிளிப்பியன்ஸ் ஓரளவேனும் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்.
இவ்வாறான அமைப்பு நிலை வேறுபாடு 2ம் வத்திக்கான சங்கம் கூட்டப்படும் வரையும் நிலவியது. இதனை மாற்றியமைக்க இச்சங்கம் பரிந்துரைத்தது.

**வழிபாட்டு முறைகள் :–**

உரோமப் பேரரசில் நிலை கொண்டிருந்த கிறிஸ்தவம், உரோமய மக்களின் வழிபாட்டு மரபில் வழக்கில் இருந்த பல பழக்கங்களை உள்வாங்கி மாற்றியமைத்தது.
உரோமர்கள் தம் தெய்வங்களுக்கும் வீரர்களுக்கும் அரசர்களுக்கும் விழா எடுத்தது, போன்று கிறிஸ்தவர்களும் விசுவாசத்திற்கு சான்று பகர்ந்த மறைசாட்சிகளுக்கு விழா எடுத்தனர்.
உரோமர் டிசம்பர் – 25 ஆம் திகதியை சூரியன் பிறந்த தின விழாவாகப் பெரும் ஆடம்பரமாகக் கொண்டாடினர். இத்தினத்தையே உரோமப் பேரரசில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கி.பி 366 முதல் நீதியின் ஆதவனான அறிவாளனான யேசு பிறந்த தினமாக இத்தினத்தை ஆடம்பரமாகாக் கொண்டாடினர்.
கி.பி 366 இல் இருந்து மேற்கு நாடுகளில் உரோமய இலத்தீன் வழிபாட்டு முறையை பின்பற்றி கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாடப்பட்டது.
கிறிஸ்தவர்களின் வழக்கிலுள்ள மன்றாட்டு, நோன்பு நாட்கள், (யூதர் மத்தியிலும் உள்ளது) பவனிகள் முதலியன உரோமயர்களின் மரபில் இருந்து தோன்றியவை.
உரோமர்கள் மத்தியில் அரசர்களுக்கும், தளபதிகளுக்குமான மரியாதை இவர்கள் மத்தியில் வழக்கில் இருந்த உடை மரபும் கிறிஸ்தவத்தினுள் நுழைந்தது.
வழிபாட்டின் போது முழந்தாளிடும் மரபும் இவர்களிடம் இருந்து பின்பற்றப்பட்டது. உரோமர்கள் மத்தியில் அரசனுக்கும், தளபதிக்கும் படைவீரர் ஒற்றைக் காலில் முழந்தாளிடுவது அவர்களுக்கு அளிக்கும் உயர் மரியாதையாகக் கருதப்பட்டது.

அடுத்த ஓலையில் தொடரும்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலக்கிய ஓசை

கேணிப்பித்தன் ச. அருளானந்தம்

இலக்கியஓசைப் பகுதியில் இலக்கியங்களைப் பற்றிய தகவல்களை வாசித்து அறிந்திருப்பீர்கள். இந்த இலக்கிய ஓசைப்பகுதிக்கு எதை எழுதுவதென்று யோசித்தேன். எனது நூலக அலுமாரியில் இருந்த நூல்களில் ஒன்றை எடுத்தேன். அது "இலக்கியச் சரம்" என்ற நூலாகும். எடுத்து வாசித்தேன். அதனை எழுதியவர் வவுனியாவைச் சேர்ந்தவர். அவரது பிறந்த இடம் பம்பைமடு என்ற அழகிய கிராமம். நான் வவுனியா மாவட்டத்தில் கல்வி அலுவலராகச் சேவை செய்த போது சென்று பார்க்காத சிற்றூர்கள் இல்லை. வன்னிக்காடு மூலிகைகள் நிறைந்த மருந்தகம். கரியதார் வீதிகளின் இருமருங்குகளிலும் பாலையும், வீரையுமாகப் போர் வீரர்கள் போல் காட்சிதரும். பருவகாலங்ளில் மஞ்சள் கம்பளம் போர்த்துப் பாலைளும், செங்கம்பளப் போர்வை கொண்டு மூடியது போல் வீரமரங்களும் காட்சிதரும்.

பம்பைமடு குளம்தொட்டு வளம் செழிக்கும் ஊர். அமரர் நாகலிங்கம் என்றபெரியார் நான்காம் வகுப்புவரைதான் படித்தவர். அவர் புராணங்களைப் படித்து பயன் சொல்லும் ஆற்றல் படைத்தவர். அவரிடம் சங்கப் பாடநூல்கள் நிறையவே இருந்தன. அறிவுப் பசியுடையோர் சென்று அவரிடம் பல விசயங்களை அறியலாம். "ஓசையொலிஎலாம் ஆனாய் நீயே" என்ற வரிக்கு ஒருநாள் பெரிய பிரசங்கமே செய்தார். அவரது மகன் திரு.நா.தர்மராஜா என்ற கணித ஆசிரியர். அவர் தந்தையைப் போல் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர். ஒரு எழுத்தாளர் பெருந்தகைப் பேச்சாளர். தர்மராஜா என்றால் பலருக்குத் தெரியாது. ஆனால் அகளங்கன் என்றால் அவரைத் தெரியாதோர் இல்லையெனலாம். தமிழால் உயர்ந்தவர். அதனால் தமிழ்மணி அகளங்கன் என்றழைப்பார்கள். அவர் ஒரு இலக்கியக் கலாநிதி.

அவரது நூலான இலக்கியச்சரம் படிப்போர்க்கு இன்பத்தைத் தரும் அந்நூலில் நான் சுவைத்தவற்றை உங்களுக்காகத் தருகிறேன். அந்நூலில் பல தலைப்புகளில் தமிழை நமக்கு எடுத்து இயம்புகின்றார். ஓசை இன்பம், சொல் இன்பம், கற்பனை இன்பம் என்ற தலைப்புகள் எனக்குப் பிடித்திருந்தன. அவற்றில் சிலவற்றை நீங்களும் படித்து அறியச் செய்யலாம் என்ற பெருவிருப்பின் காரணமாகத் தருகிறேன். படியுங்கள்.

தமிழ்க் கவிதைகளில் நம்மை மிதக்கவிடும் ஓசை நயத்தில் மனதைப் பறிகொடுத்தவர்கள் பலருண்டு. கவிதையின் பொருள் புரியாத போதும், அதிலுள்ள ஓசைநயம் மனதை ஈர்த்தெடுத்து ஆனந்தத்தில் ஆழ்த்தும். இயற்கை ஒலிகள் நமக்குப் பொருளைத் தருவதில்லை. இதனைபாட்டுக்கொருபுலவன் பாரதி :

'
......................................

'கானப் பறவைகலகலஎனும் ஓசையிலும்
காட்டுமரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
..........................................................

'வேயின் குழலோடுவீணைமுதலாம்,மனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலும் காட்டினிலும் நாளெல்லாம்
நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப் பறிகொடுத்தேன்
பாவியேன்'

என இயற்கை ஒலிகளை, ஓசை இன்பத்தை அனுபவித்துக் குயிற் பாட்டில் பாடினான். அதேபோல் பிரமாவின் படைப்பை வியந்து பாடும் போது

'காலம் படைத்தாய், கடப்பதிலாத்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தக்கமைத்தாய்
ஞாலம் பலவினிலும் நாள்தோறும் தாம்பிறந்து
தோன்றிமறையும் தொடர்பாப் பலஅனந்தம்
சான்றஉயிர்கள் மைத்துவிட்டாய் நான்முகனே
சாலமிகப் பெரியசாதனைதான் இ·.தெல்லாம்
தாலமிசைநின்றன் சமர்த்துரைக்கவல்லார்யார்
.................................................
பூதங்கள் ஒத்துப் புதுமைதரல் விந்தையெனில்
நாதங்கள் சேரும் நயத்தினுக்குநேராமோ
ஆசைதருங் கோடிஅதிசயங்கள் கண்டதிலே
ஓசைதரும் இன.பம. உவமையிலா
இன்பமன்றோ'
எனஓசை இன்பம் பற்றிபாரதிஉளம் குளிரப் பாடுகிறான்.'

கவிதையில் ஓசை இன்பத்தில் பலர் மனதைப் பறிகொடுத்திருக்கிறார்கள் இவற்றை விளக்க தமிழ்மணி அகளங்கன் 'கவிச்சக்கரவர்த்தி கம்பர, சயங்கொண்டார், சேக்கிழார், கச்சியப்பசிவாச்சாரியார், வில்லிபுத்தாழ்வார், வீரகவிராயர், திரிகூடராசப்பக் கவிராஜர், அருணகிகிரிநாதர், ஒட்டக்கூத்தர் போன்ற பலரின் பாடல்களைத் தந்து நம்மை வியக்க வைக்கிறார்.

ஒரு கவிஞன் வாசகர்களின் கண்முன்னே கொண்டு வந்து காட்டுவதற்கு ஓசையை பயன்படுத்திய கவிதைகள் தமிழ் இலக்கியப் பரப்பில் அதிகம் உண்டு என்று கூறுகிறார். கவிதை வாசிப்பதில் ஆர்வம் கொண்டவர்களை முதலில் ஓசை கவர்கிறது. பின்னர் கருத்தூன்றிப் படிக்கும் போது தான் கற்பனைநயம், கவித்துவம் என்பன உள்ளத்தைக் கவர்கின்றன.

பக்திப் பாடல்களிலும் ஓசைக்கு முன்னுரிமை கொடுத்து கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணத்தில் பாடியுள்ளார். சூரபத்மன் முருகப்பெருமானுடன் இறுதிப் போரில் ஈடுபட்டிருக்கிறான். அவன் எடுத்த வடிவங்களையும் தோற்றங்களையும் கச்சியப்ப சிவாச்சாரியார் ஓசை மூலமே உணர வைக்கிறார். அதனைக் கீழுள்ள பாடல் வரிகளைப் பார்த்து உணர்ந்து அறிந்து கொள்வோம்.

ஓவாவியல் புரீமூ வரிலொருசார் வருமொழியுந்
தேவாசுரர் பிறராமெனஒருசார் வருஞ் சேணாள்
கோவாமெனவொருசார் வருமொருசார் வருங் குறள்போ
லாவாவெனக் கொடுங்கூற் றெனவொருசார் வருமன்றோ'
ஒருசார் விடமெனவந்திடுமொருசார் வரும் பணிபோ
லொருசார் முகிலெனவந்திடுமொருசார் வருமிருள்போ
லொருசாரர் உருமெனவந்திடுமொருசார் வரும் வரைபோ
லொருசார் தனதுருவாய்வருமொருசார் வரும் கதிர்போல்'
.................................................'

சூரபத்மன் எடுத்து வந்த வடிவங்களையும் அவற்றின் தன்மைகளையும் கடுமையான ஓசையினால் பாடியுள்ளார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் தமிழில் உள்ளஓசை இன்பத்தின் நுட்பங்களை அழகாக எடுத்தியம்புகிறார். தாடகை பற்றி அவர் பாடுகையில் அவளது தோற்றத்தை இவ்வாறுகாட்டுகின்றார்.

'இறைக்கடைதுடித்தபுருவத்தளெயிறென்னும்
பிறைக்கடைபிறக்கிடமடித்தபிலவாயள்
மறைக்கடை அரக்கிவடவைக்கனல் இரண்டாய்
நிறைக்கடல் முளைத்தன நெருப்பெழ விழித்தாள்'

வல்லின எழுத்துக்களை மிகுதியாகக் கொண்ட சொற்களைப் பயன்படுத்தி படிப்போரின் உள்ளத்தில் உணர்ச்சியை விதைத்துவிடுகிறார்.

அடுத்த இதழில் தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்ப்பு விழா திருப்பலியில் திருத்தந்தையின் மறையுரை

ஏப்.,16,2017. ஏப்ரல் 16, உயிர்ப்புப் பெருவிழா ஞாயிறு காலை 10 மணிக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுரு பசிலிக்கா வளாகத்தில் தலைமையேற்று நடத்திய திருப்பலியில் வழங்கிய மறையுரையின் சுருக்கம்:

அன்பு சகோதர, சகோதரிகளே, "இயேசு உயிர்த்துவிட்டார்" என்ற செய்தியை இன்று திருஅவை சப்தமிட்டு கூறுகிறது, பாடுகிறது. ஏன்? பேதுரு, யோவான், பெண்கள் அனைவரும் வேதனையால் மூடப்பட்ட உள்ளங்களுடன் கல்லறைக்குச் சென்றனர். அவர்களைப் பொறுத்தவரை, இறந்தவர் மீண்டும் உயிர் பெற்றெழுவது இயலாத ஒன்று. இத்தகைய மனநிலையே தோல்வி. தோல்வி, நம்மை கல்லறைக்கு அழைத்துச் செல்லும்.

கல்லறைக்குச் சென்றவர்களிடம், வானதூதர், "அவர் இங்கில்லை, உயிர்த்துவிட்டார்" என்று கூறினார். இச்செய்தியைத் தொடர்ந்து, குழப்பங்கள் எழுந்தன. தங்கள் தலைவருக்கு நடந்ததுபோல் தங்களுக்கும் நிகழும் என்று அஞ்சிய சீடர்கள், மேலறையில் தங்களையே மூடி வைத்துக் கொண்டனர். மூடியிருந்த சீடர்களின் உள்ளங்களைத் திறக்க, உயிர்த்த இயேசு அவர்கள் முன் பலமுறை தோன்றினார்.



திருஅவையும் தோல்விகளைச் சந்தித்துள்ளது. அந்நேரங்களில், நாம் அச்சத்தால் நம் உள்ளங்களை மூடி வைத்துள்ளோம். நம்மிடம் இன்று, "இயேசு உயிர்த்துவிட்டார்" என்று, திருஅவை சொல்கிறது. இது கற்பனை அல்ல, மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வெறும் விழா நிகழ்ச்சியும் அல்ல.

கட்டுவோரால் தூக்கியெறியப்பட்ட கல், மூலைக்கல்லாக மாறியதை, கிறிஸ்துவின் உயிர்ப்பில் நாம் கொண்டாடுகிறோம். தூக்கியெறியும் கலாசாரத்திற்குப் பழகிவிட்ட நாம், பலவற்றைத் தூக்கியெறிகிறோம். துன்பமும், கொடுமையும் சூழ்ந்த இவ்வுலகில், சிறு, சிறு கற்களாக இருக்கும் நாம் அனைவருமே மதிப்பு பெற்றவர்கள். யாரையும் தூக்கியெறிய இயலாது.

நம்மைச் சுற்றி நிகழும் அனைத்து துயரங்களையும் நம்மால் புரிந்துகொள்ள இயலாவிட்டாலும், "கிறிஸ்து உயிர்த்துவிட்டார்" என்பதை, நம்பிக்கையோடு எடுத்துச் சொல்வோம்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிர் போட்டி - 06

பெயர் : ..........................................................

விலாசம் : ..........................................................

..........................................................

பங்கு : ..........................................................

### புனித ஜோசப் வாஸ் அடிகளார்

தொடர்பான புதிர்ப்போட்டி

- அனைவருக்குமானது -

**மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. புனித ஜோசப்வாஸ் அடிகளார் எப்போதும் உண்ணப் பழகிக் கொண்ட உணவு?
   1. சப்பாத்தி 2. ரொட்டி 3. கஞ்சி 4. சோறு

2. திருப்பலியின் பின் இவர் ஏழைகளுக்கு வழங்கியது?
   1. பரிசுப்பொருள் 2. அரிசி 3. பணம் 4. உடைகள்

3. புனித ஜோசப்வாஸ் அடிகளார் புனிதராக பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு. மாதம், திகதி?
   1. 2015.04.14 2. 2014.04.14 3. 2015.01.04 4. 2014.01.14

4. 1699ம் ஆண்டு இவரால் மேற்கொள்ளப்பட்ட மறைபோதக தரிசிப்பின் சான்றாக விளங்கும் திருச்சுரூபம் உள்ள இடம்?
   1. கொழும்பு மறை மாவட்டம் மோதர 2. கொழும்பு மறைமாவட்டம் கடலான
   3. சிலாபம் மறைமாவட்டம் பள்ளகண்டல்
   4. மன்னார் மறைமாவட்டம் மடு



5. இவர் அருட்தந்தையாக பணியாற்றிய காலம்?
   1. 30 வருடங்கள் 2. 24 வருடங்கள்
   3. 10 வருடங்கள் 4. 15 வருடங்கள்

பரிசு அனுசரணை :

**திரு.ஜூட் நிரோசன்**
**- பாலையூற்று**

விடை அனுப்ப வேண்டிய முகவரி :

**ஆசிரியர்**
**அலைஓசை**
**இல 17, புனித அந்தோனியார் வீதி,**
**திருகோணமலை.**


இப்பகுதியிலேயே விடைகளை நிரப்பி அனுப்ப வேண்டிய இறுதித் திகதி - 2017.06.15
சரியான விடைகளிலிருந்து தெரிவுசெய்யப்படும் மூவருக்கு தலா ரூ300 பரிசாக வழங்கி வைக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மறை மாவட்டச் செய்திகள்

கடந்த 2017.04.02 ம் திகதி மாலை 6.45 மணிக்கு திருகோணமலை புனிதசூசையப்பர் கல்லூரியின் திறந்த வெளியரங்கில் திருகோணமலை மறைமாவட்ட கிறிஸ்தவக் கலை இலக்கியப் பேரவையினால் "நிமிர்ந்து பாராயோ" என்னும் யேசுவின் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்பட்டது. இந்நிகழ்வினை திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி. கிறிஸ்டியன் நோயல் இமானுவல் ஆண்டகை அவர்கள் ஆரம்பித்து வைத்தார். பெருந்திரளான மக்கள் கலந்து சிறப்பித்தனர்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org